Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 201 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 16ஆம் திகதி வியாழக்கிழமை
(30.03.2023) ஹிஜ்ரி 1444, ரமழான் - 07, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## கமெண்ட் கந்தர்...

பெற்றோல் வரிசை திரும்பவும் வந்தா கொஞ்சம் காசு பார்க்கலாம் எண்டு நினைச்சதன் விளைவுதான் பெற்றோலிய போராட்டம்... அதுக்கும் ரணில் ஆப்படிச்சுட்டார்..!



## உஷ்




ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஆளுங்கட்சியில் இணையவுள்ளனர்.

எதிர்வரும் 4ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது ஆளுங்கட்சிப் பக்கம் வருவதற்கு இவர்கள் தயாராகி வருவதாக தகவல்கள் சொல்கின்றன.

அதில் சிலருக்கு அமைச்சு, இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாக கேள்வி.

# எரிபொருள் விலை அதிரடிக் குறைப்பு!



நா. தினுஷா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய நேற்று (29) நள்ளிரவுமுதல் எரிபொருள் விலை சூத்திரத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய, பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலை குறைக்கப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அதனடிப்படையில் 92 வகையைச் சேர்ந்த...

| எரிபொருள் | முந்தைய விலை | குறைக்கப்பட்ட தொகை | புதிய விலை |
|---|---|---|---|
| 92 ரக பெற்றோல் | 3 | 5 | 23 |
| டீசல் | 3 4 | 80 | 214 |
| 95 ரக பெற்றோல் | 40 | 024 | 264 |
| சுப்பர் டீசல் | 40 | 45 | 354 |
| மண்ணெண்ணெய் | 2 4 | 10 | 1 4 |

02 பக்கம்

# 20 பேருக்கு கட்டாய லீவு!

## அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு விளைவித்ததாக சாடும் அமைச்சர் காஞ்சன




நா. தினுஷா

எரிபொருள் விநியோகத்துக்கு இடையூறு விளைவித்த தொழிற் சங்கத் தலைவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அடையாளம் காணப்பட்ட 20 தொழிற்சங்கத் தலைவர்களுக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு விளைவிக்கும்... 02 பக்கம்

## புலஸ்தினி உயிரிழப்பு உறுதியானது



சாய்ந்தமருதில் 2019 ஏப்ரல் 26ஆம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்பில் புலஸ்தினி மகேந்திரன் என்கிற சாரா ஜெஸ்மின் உயிரிழந்துள்ளதாக மரபணு பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் நடந்த இடத்தில் மீட்கப்பட்ட தடயங்களுடன் புலஸ்தினியின் தாயாரின் மரபணுவை ஒப்பிட்டு பரிசோதனை செய்ததில் இது தெரியவந்ததாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

## முச்சக்கரவண்டிகளுக்கான கட்டணத்திலும் திருத்தம்



எரிபொருள் விலை குறைக்கப்பட்டதையடுத்து முச்சக்கரவண்டிகளுக்கான கட்டணத்திலும் திருத்தம் மேற்கொள்ளப்படுமென அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர நேற்று (29) தெரிவித்தார். அதனடிப்படையில் முதலாவது கிலோ மீற்றருக்கான... 02 பக்கம்

## பஸ் கட்டணங்கள் நள்ளிரவுமுதல் 12.9 வீதத்தால் குறைப்பு



எரிபொருள் விலை குறைக்கப்பட்டதையடுத்து இன்று நள்ளிரவுமுதல் அமுலுக்கு வரும்வகையில் 12.9 வீதத்தால் பஸ் கட்டணங்கள் குறைக்கப்படுவதாக போக்குவரத்து அமைச்சு நேற்று (29) அறிவித்தது.. 02 பக்கம்



நெடுந்தீவு வெடியரசன் கோட்டையில் கடற்படையினர் அமைத்த பதாகையை அடுத்து கடற்படை மற்றும் தொல்பொருள் திணைக்களத்துக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று (29) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

## முன்னாள் சபாநாயகரின் பூதவுடல் பாராளுமன்றில்

கே. சுபானி



மறைந்த முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இன்று (30) மு.ப. 09.00 மணிக்கு பாராளுமன்றத்தில் வைக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற வளாகத்தில் வைக்கப்படவுள்ள ஜோசப் மைக்கல் பெரேராவின்... 02 பக்கம்

## பொலிஸ் உயரதிகாரிகள் ஐவருக்கு திடீர் இடமாற்றம்

வடமேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் ஐவர் ஒரே நேரத்தில் பொலிஸ் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். நவகத்தேகம பொலிஸ் நிலையத்தின் கான்ஸ்டபிள் ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பிலேயே இவர்களுக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. 02 பக்கம்

## இரு மனுக்கள் இன்று விசாரணைக்கு

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இரு மனுக்கள் இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. ஐவரடங்கிய நீதியரசர்கள் குழு இந்த மனுக்கள் மீது விசாரணை நடத்தப்படவுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை தக்கவைக்காமல் உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை நடைமுறைப்படுத்தாமல் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றஞ்சாட்டி இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

» 02 பக்கம்

## இரண்டு பேரை கொலைசெய்த இருவருக்கு மரணதண்டனை

### 25 வருடங்களின் பின்னர் மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கனகராசா சரவணன்)

ஈழவர் ஜனநாயக முன்னணி கட்சியின் (ஈரோஸ்) செயலாளர் நாயகம் பிரபாகரனின் 3 வயது பிள்ளை மற்றும் கட்சி உறுப்பினர் ஆகிய இருவரை 1997ஆம் ஆண்டு கொலைசெய்தமை, 4 பேரை துப்பாக்கியால் சுட்டும்... 02 பக்கம்

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகள் மாயம்

### கந்தப்பளையில் பொலிஸார் தீவிர விசாரணை

நமது நிருபர்

நுவரெலியா மாவட்டம், கந்தப்பளை மெரிகோல்ட் தோட்டத்தில் வசித்துவந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரிகளும் ஒரு சகோதரனும் திடீரென மாயமாகியுள்ளதாக ஹைபொரெஸ்ட் பொலிஸார்... 02 பக்கம்

## யானை தாக்கி வன அதிகாரி பலி

அநுராதபுரம், கலென்பிந்துனுவெவ கிராமத்துக்குள் நுழைந்த யானைகளை விரட்டுவதற்கு முயற்சித்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரியொருவர் யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார். அந்தக் கிராமத்துக்குள் நேற்றுமுன்தினம் நூற்றுக்கணக்கான யானைகள் புகுந்துள்ளன.

அவற்றை விரட்டும் நோக்கில் ரிட்டிகல வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் 20 பேர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இதன்போது ஆத்திரமடைந்த யானைகள், 02 பக்கம்

## விலையுயர்ந்த கைபேசிகளை பார்த்து ஆங்கிலேயர் அதிர்ச்சி

### பண்டாரவளை பாடசாலைக்கு உதவ வந்தவருக்கு சங்கடம்

பண்டாரவளையிலுள்ள பின்தங்கிய பாடசாலையொன்றின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை இலவசமாக வழங்குவதற்கு வந்த ஆங்கிலேயர் ஒருவர், மாணவர்களும் பெற்றோரும் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசிகளைக் கண்டு அதிர்ச்சியடைந்ததாக தெரிவித்துள்ளார்.

அந்தப் பாடசாலையை தெரிவுசெய்தமைக்காக அதிருப்தியை வெளியிட்டுள்ள அவர், தனது கைபேசியை விட அதிக விலைகொண்டவற்றை மாணவர்களும் பெற்றோரும் பயன்படுத்துவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

இலங்கையின் தற்போதைய நிலைமையை பிரித்தானிய ஊடகங்களின் ஊடாக பார்த்த.... 02 பக்கம்

# பகுதியளவிலாவது தேர்தலை நடத்த அரசு முன்வர வேண்டும்

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிறது என்றால், பகுதியளவிலாவது தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தேர்தல் ஆணைக்குழு முன்னாள் தலைவரும் தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல் நிலைவரம் குறித்து நேற்று (29) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் காலதாமதமே நாட்டில் தற்போதுள்ள நெருக்கடி நிலைமையாகும். எனவே, நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் தேர்தல் ஆணைக்குழுவால் உரிய திகதியில் தேர்தலை நடத்த முடியாது என்பது தெளிவாக தெரிகின்றது. உரிய நேரத்தில் தேர்தலை நடத்தாமலிருப்பது குற்றமாகும். அதேபோன்று, இது கவலைக்குரிய நிலைமையாகும். இது நாட்டில் இடம்பெறக் கூடாத நிலைமையாகும்.

இந்தப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பதென்பதே தற்போதுள்ள பிரதான பிரச்சினையாகும். பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கான வாய்ப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கும், நிதி அமைச்சுக்கும் திறைசேரிக்குமே இருக்கிறது. இவர்களுக்கு அப்பால் எங்களாலோ, ஊடகங்களாலோ அல்லது மக்களாலோ தேர்தலை நடத்த முடியாது. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள், அரசாங்கம் மற்றும் தேர்தல் ஆணைக்குழு ஒன்றிணைந்து பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போதுள்ள நிதியில் தேர்தலை நடத்த முடியாவிட்டால், பகுதியளவிலாவது தேர்தலை நடத்துவதற்காகவாவது முயற்சி எடுக்கவேண்டும். நாட்டில் அநேகமான பிரதேசங்களில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்றனர். இவர்களுக்கு அப்பால் மாகாணசபையோ அல்லது உள்ளூராட்சி சபைகளோ இல்லை. வடக்கு, கிழக்கின் சில மாவட்டங்களிலுள்ள மக்கள் தொகுதியினரில் ஆளுந்தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் எவரும் இல்லை. எனவே, இதுவொரு பாரதூரமான பிரச்சினையாகும்.

அரச அதிகாரிகளே இன்று நாட்டை நிர்வகிக்கிறார்கள். மாகாண சபைகளில் ஆளுநர்களும், செயலாளர்களுமே நிர்வாகத்தை முன்னெடுத்து வருகிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்காக அரசாங்கம், தேர்தல் ஆணைக்குழு, பாராளுமன்றம் என்பன ஒன்றிணைந்து இதற்கு நடவடிக்கையொன்றை எடுப்பது அவசியமாகும். பிரதிநிதித்துவ ஜனநாயகம் முற்றாக இல்லாமல் போயுள்ளது. ஆனால், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை மாத்திரம் ஜனநாயகமாக கருதமுடியாது. பாதுகாப்பு சுதந்திரம், கலாசார சுதந்திரம், சமய சுதந்திரம், அடிப்படை உரிமைகளிலுள்ள சகல விடயங்களும் உள்ளடங்குகின்றன. தேர்தல் ஒன்று இல்லை என்பதன் தெளிவான பொருள், அங்கு ஜனநாயகம் என்றவொன்று இல்லை என்பதே பொருளாகும். மிக விரைவில் தேர்தலை நடத்துவார்கள் என்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும். ஓகஸ்ட் மாதம் உலக இளைஞர் தினத்துக்கு முன்போ அல்லது செப்டெம்பர் 15ஆம் திகதி உலக ஜனநாயக தினத்துக்கு முன்பாக தேர்தலை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.



# ஐ.எம்.எவ். ஆதரவுடன் 04 வருடங்களில் பொருளாதார ஸ்திரத்தன்மை உருவாக்கம்

## ஜனாதிபதி ரணில் ஆனந்த கல்லூரி நிகழ்வில் தெரிவிப்பு

எமது நாட்டின் மாணவர்கள் 2048ஆம் ஆண்டளவில் நாட்டைப் பொறுப்பேற்கும் வகையில் நவீன தொழில்நுட்பத்தின் அனைத்து அம்சங்களிலும் அறிவை பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்றும், தொழில்நுட்பத்தின் நவீன முன்னேற்றங்களை மேம்படுத்துவதன் மூலம் எதிர்காலத்திற்கு தயாராக வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் நான்கு வருடங்களில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திய பின்னர், அதே பழைய முறையைப் பின்பற்றுவதா அல்லது புதிய முறையின் ஊடாக முன்னேறி வரும் உலகத்துடன் முன்னோக்கிச் செல்வதா என்பதை தீர்மானிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

கொழும்பு ஆனந்த கல்லூரியின் 135ஆவது வருடாந்த பரிசளிப்பு விழாவில் நேற்று (29) முற்பகல் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய, மத, கலாசார, அரசியல், பொருளாதாரம் என அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கி இன அமைதிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சுபசன் ஆனந்திய நபர் ஒருவருக்கு வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் 'ஆனந்தபிமானி' விருது முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு வழங்கப்பட்டதோடு, தனது பாடசாலை வாழ்க்கையின் போது சகல துறைகளிலும் மிகச் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய சிறந்த ஆனந்த மாணவருக்கான 'பிரிட்ஸ்கூன்ஸ்' விருது டபிள்யூ.எஸ்.நிம்சத்திற்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

பரிசளிப்பு விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டதாவது,

அண்டை நாடான இந்தியாவில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் உள்ளனர். அதில் குறைந்தபட்சம் ஒரு மில்லியன் பேரை கொண்டுவந்தாலும் போதும். வேறு எதுவும் தேவையில்லை. இந்தியா இன்று வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. இந்தியா முன்னேறுவதற்கு சில மூலப் பொருட்கள் இல்லை. உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும். அவர்களின் துறைமுகத்தில் போதிய இடவசதி இல்லை.

எனவே கொழும்பை பாரிய துறைமுகமாக மாற்ற வேண்டும். புதிய தெற்கு துறைமுகத்தைப் போன்றே வடக்கு துறைமுகமும் உருவாக்கப்பட்டது. கடல்சார் பொருளாதாரத்தை நாம் உருவாக்க முடியும். இதுவரை எந்த ஒரு நாடும் இதனை செய்யவில்லை.

எங்களுக்கு புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தலாம். நம்மிடம் தகவல் தொழில்நுட்பம் இருக்கிறது. இதில் முக்கிய அங்கம் செயற்கை நுண்ணறிவை பெறுவது. குறிப்பாக நம்மிடம் உள்ள பிரிவு அது. எதிர்காலத்தில், நாங்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்கு செல்ல வேண்டும். மற்ற நாடுகளை விட முன்னேறும் நாடாக மாற்ற வேண்டும். அத்தகைய நாட்டைக் கட்டியெழுப்ப புதிய தலைவர்கள் தேவை. எங்களால் வழிகாட்ட மட்டுமே முடியும். யார் தலைமை ஏற்க வேண்டும்? இளைஞர்களாகிய நீங்கள் தான் தலைமைத்துவத்தை பெற வேண்டும். 77ஆம் ஆண்டில் ஜே.ஆர் கூட அது உங்கள் எதிர்காலம் என்று தான் கூறினார். அதனால் நல்லது கெட்டது இரண்டும் வளர்க்கப்பட்டது. இப்போது எனக்கும் உங்கள் எதிர்காலம் என்று தான் சொல்ல வேண்டும். அந்த சவாலை ஏற்க முடியுமா? நமது எண்ணங்களின்படி சமுதாயத்தை மாற்றுவது பயனற்றது. இளைஞர்கள் புதிய தொழில்நுட்பத்துடன் உள்ளனர். அந்த சமூகத்திற்கு செல்லுங்கள். எல்லாவற்றினதும் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளுங்கள்.

இந்தப் பாடசாலையிலுள்ள திறமையானவர்கள் முன்னேறிச் செல்வார்கள். சவால்கள் இருந்தால் அதனை ஏற்க பயப்பட வேண்டாம். சவால்களை ஏற்றுக்கொண்டால் தோற்றுவிடுவோம் என்று நினைத்தால் ஒன்றும் செய்ய முடியாது. சவால்களை யோசிக்காமல் ஏற்றுக்கொண்டால் முன்னேறிச் செல்ல முடியும்.

# முடிவுக்கு வந்த நீண்ட வரிசை

*நா. தினுஷா*

பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்களினால் முன்னெடுக்கப் பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தின் காரணமாக கடந்த இரு தினங்களாக நாட்டிலுள்ள பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் வரிசையில் காத்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. கொழும்பு மற்றும் கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் அருகில் நேற்று முன்தினம் (28) நீண்ட வரிசையை பார்க்கக்கூடியதாக இருந்ததுடன் நேற்று (29) காலையிலும் மக்கள் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் காத்திருந்தார்கள்.

எரிபொருள் இறக்குமதி உள்ளிட்ட இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கு இருக்கும் அதிகாரங்களை மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குதல் உள்ளிட்ட அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து எரிபொருள் கூட்டுத்தாபன பணியாளர்கள் நேற்று முன்தினம் சேவையிலிருந்து நீங்கியதை தொடர்ந்து கூட்டுத்தாபனத்தின் பெரும்பாலான பணிகள் தடைப்பட்டிருந்தன.

எரிபொருள் பவுசர்களுக்கு எரிபொருள் நிரப்பும் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததால், நேற்று முன்தினம் பவுசர்கள் எரிபொருள் களஞ்சியசாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தன.

இந்நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் களஞ்சியங்களுக்கு பொலிஸ் உள்ளிட்ட முப்படையினரை பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த எரிபொருள் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதனைத் தொடர்ந்து நேற்று எரிபொருள் விநியோகம் வழமைக்கு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## முன்னாள்...

பூதவுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுதி அஞ்சலி செலுத்தவுள்ளார். முன்னாள் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்றுமுன்தினம் (28) தனது 82ஆவது வயதில் காலமானார்.

இந்நிலையில் அவரது பூதவுடல், இறுதி அஞ்சலிக்காக இன்று (30) காலை 09.00 மணியளவில் பாராளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய, மு.ப 8.45 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினரின் வருகை எதிர்பார்க்கப்படுகிறது. மு.ப 09.00 மணிக்கு மறைந்த சபாநாயகரின் பூதவுடல் தாங்கிய வாகனத் தொடரணி பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலை அடையவுள்ளது.

இதன்போது தற்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், கட்சித் தலைவர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க, பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான குஷானீ ரோஹணதீர ஆகியோரால் பூதவுடல் பொறுப்பேற்கப்படும். பின்னர் படைக்கலசேவிதர், பிரதிப் படைக்கலசேவிதர், உதவிப் படைக்கலசேவிதர் ஆகியோர் முன்னிலையில் செல்ல பூதவுடல் செங்கம்பளத்தின் ஊடாக பாராளுமன்ற விசேட வைபவ மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

மு.ப 9.00 மணிமுதல் மு.ப 10.00 மணிவரை அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காகப் பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் என செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

மறைந்த சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு இறுதி அஞ்சலி செலுத்த சகல பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், பாராளுமன்ற செயலகத்தின் பணியாளர்கள், முன்னாள் பணியாளர்கள் மற்றும் பாராளுமன்றத்துடன் இணைந்த ஏனைய பணியாளர்களையும் இணைந்துகொள்ளுமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

1941ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ஆம் திகதி பிறந்த ஜோசப் மைக்கல் பெரேரா, இலங்கை பாராளுமன்றத்தின் 17ஆவது சபாநாயகராக 2001ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி முதல் 2004ஆம் ஆண்டு பெப்ரவரி 07ஆம் திகதி வரை சேவையாற்றியுள்ளார்.

1964-1967 ஜா-எல நகர சபை உறுப்பினராக அரசியலுக்குள் நுழைந்த ஜோசப் மைக்கல் பெரேரா, 1967-1970 ஜா-எல நகரசபை உப தலைவராக நியமிக்கப்பட்டார். 1970-1971 ஜா- எல நகர சபையின் தலைவராகவும், 1971-1976 எதிர்க்கட்சியின் முதற்கோலாசானாகவும் பணியாற்றியிருந்தார்.

1976-1977 முதலாவது தேசிய அரசப் பேரவைக்குத் தெரிவுசெய்யப்பட்ட அவர், 1977-1978 இரண்டாவது அரசப் பேரவைக்கும், 1978-1988 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் முதலாவது பாராளுமன்றத்தின் உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

இதன் பின்னர் இவர் 1989 முதல் 2015 வரை பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், உள்நாட்டு அமைச்சர், தொழில் அமைச்சர், மீன்பிடித்துறை அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு அமைச்சுப் பதவிகளையும் வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 20 பேருக்கு...

தொழிற்சங்க தலைவர்களுக்கு எதிராக பாரபட்சமற்ற ரீதியில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் எரிபொருள் களஞ்சியம் மற்றும் விநியோக செயற்பாடுகளின் பாதுகாப்புக்காக பொலிஸ், முப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சின் பிரதான அலுவலகத்தில் நேற்று (29) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எரிபொருள் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் விநியோக பிரதிநிதிகளுடன் ஒப்பந்த அடிப்படையில் செயற்படும் 450 வரையிலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வெளிநாட்டு மட்டத்தில் செயற்படும், சர்வதேச அனுபவம் கொண்டவர்களிடம் ஒப்படைப்பது எரிபொருள் இறக்குமதி, களஞ்சிப்படுத்தல், பகிர்ந்தளித்தல் மற்றும் விற்பனை ஆகிய விடயங்கள் தொடர்பில் கடந்த வருடம் மே மாதம் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தின் பிராகாரம், உள்நாட்டில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக பிரதான சர்வதேச நிறுவனங்கள் மூன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சினோபெக், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் செயற்பட்டு வரும் யுனைட்டட் பெற்றோலியம், ஐக்கிய அமெரிக்காவிலும் மெக்சிகோவிலும் செயற்பட்டுவரும் ஆர்.எம்.பார்க்ஸ் மற்றும் அவர்களுடன் இணைந்து செயற்பட்டு வரும் செல் ஆகிய நிறுவனங்களுகளுக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமில்லாத ஒப்பந்த அடிப்படையில் செயற்பட்டு வரும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கே இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே சில தொழிற்சங்கங்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன. நேற்று முன்தினம் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு 95 சதவீதத்துக்கு அதிகமான சக ஊழியர்கள் ஆதரவை பெற்றுக்கொடுத்திருக்கவில்லை என்பது விசேட அம்சமாகும். ஆனால், அன்று மதியம், சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சிலர் கடமையில் ஈடுபட்டிருந்தவர்களை மதுபோதையில் அச்சுறுத்தல் விடுத்து, அவர்களை சேவையிலிருந்து நீக்கும் வகையில் செயற்பட்டிருந்தார்கள். இவர்களின் பாதுகாப்பற்ற செயற்பாடுகளினால் குறிப்பாக குழாய் கட்டமைப்பு மூடப்பட்டமை, விமான போக்குவரத்துக்கான எரிபொருளை விநியோகிக்கும் புகையிரதத்தை இடைநிறுத்தும் வகையில் இந்த தொழிற்சங்க தலைவர்கள் செயற்பட்டிருந்தார்கள்.

ஆதரவு வழங்காதவர்கள் இன்றும் (நேற்று) கடமைக்கு வந்திருந்தார்கள். காலை 6.00 மணிமுதல் காலை 9.00 வரை கொலன்னாவ, சபுகஸ்கந்த, முத்தராஜவல உள்ளிட்ட அநுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, காலி, ஹப்புத்தளை, காங்கேசன்துறை, குருநாகல், மாத்தறை, பேராதெனிய ஆகிய பிரதேச அலுவலகங்களினூடாக 6ஆயிரத்து 600 லீற்றர் டீசலும், 92 வகையைச் சேர்ந்த பெற்றோல் 6ஆயிரத்து 600 லீற்றரும் விநியோகிக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினமும் பெருமளவு எரிபொருள் விநியோகிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் நேற்று முன்தினம் இடம்பெற்ற அச்சுறுத்தல் செயற்பாட்டினால் பணியாளர்களும் அச்சத்துடனே இருந்தார்கள். அதன் காரணமாக பொலிஸ் உள்ளிட்ட முப்படையினரின் உதவியை நாடவேண்டி ஏற்பட்டது. பாதுகாப்புப் பிரிவினரின் ஒத்துழைப்புடனேயே எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை முன்னெடுக்க நேர்ந்தது.

இந்நிலையில், இன்றும் (நேற்று) கடமைகளுக்கு வருபவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்க சிலர் தயாராக இருந்ததாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. அதனடிப்படையில், இவ்வாறு கடமைகளை சீர்குலைக்கும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராக உயர்ந்தபட்ச ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கையை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். ஆகவே, தொழிற்சங்க தலைவர்களாக கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்திய, அடையாளங்காணப்பட்ட 20 பேரை கட்டாய விடுமுறையில் அனுப்ப நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

பணி இடங்களுக்கு பிரவேசிப்பதற்கும் அவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, பணியில் ஈடுபடாத ஓய்வுபெற்று, அரசியல் நோக்கங்களுக்காக செயற்படும் சிலர் எவ்வாறு எரிபொருள் களஞ்சியத்துக்குள் நுழைந்தார்கள் என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்தவர்களும் இந்த நடவடிக்கைகளில் இருக்கிறார்கள். தேர்தல் நடவடிக்கைக்காக அவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள் என்பது குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும், அவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள விசாரணைகளை தொடர்ந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவும் தீர்மானித்துள்ளோம். அத்தியாவசிய சேவையின் பிரகாரமும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, மக்கள் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து மக்கள் குழப்பமடைய வேண்டியது அவசியமில்லை.

கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலான செயற்பாடுகளினால் மக்கள் அச்சமடைந்திருக்கிறார்கள். ஏப்ரல் மாதம் முதலாம் திகதியுடன் எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் எரிபொருளுக்காக கோரிக்கை முன்வைக்காத சில எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சிலரும் இருக்கிறார்கள். ஆகவே, எரிபொருள் நிலைய உரிமையாளர்களின் கோரிக்கைக்கமைய விநியோகத்தை மேற்கொள்ள தயாராக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

## இரு மனுக்கள்...

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் புவனகே அலுவிஹார, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட, மூர்து பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் மனுக்கள் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

## யானை தாக்கி...

அதிகாரிகளை துரத்த ஆரம்பித்துள்ளன. இந்நிலையிலேயே அதிகாரியொருவர் யானை தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

மாத்தளையைச் சேர்ந்த 48 வயதான பீ.எம். விஜேகோன் என்ற அதிகாரியே யானை தாக்கி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## முச்சக்கர வண்டிகளுக்கான...

கட்டணமாக 100 ரூபாவும் இரண்டாவது கிலோ மீற்றருக்கான கட்டணமாக 80 ரூபாவும் அறவிடப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

முச்சக்கர வண்டிகளுக்கு ஐந்து லீற்றர் மாத்திரமே பெற்றோல் வழங்கப்படுவதை விமர்சித்த அவர், பெற்றோலின் அளவு அதிகரிக்கப்படுமானால் கட்டணத்தை குறைப்பதற்கான உண்மையான சாத்தியக்கூறுகள் இருப்பதாக தெரிவித்தார்.

## பஸ் கட்டணங்கள்...

அதனடிப்படையில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களிலும் தனியார் பஸ்களிலும் புதிய கட்டணங்கள் அறவிடப்படவுள்ளன. இதற்கு முன்னர் ஆகக் குறைந்த பஸ் கட்டணம் 34 ரூபாவாக அறவிடப்பட்டதுடன் புதிய திருத்தத்துக்கு அமைய 30 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## ஒரே குடும்பத்தைச்...

'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (29) தெரிவித்தனர்.

தாயார் மத்திய கிழக்கு நாடொன்றுக்கு தொழில் நிமித்தம் சென்றுள்ள நிலையில் தந்தையுடன் வசித்து வந்த 19 வயதான மூத்த மகள், 14, 13 வயதுடைய இரு சிறுமிகள் மற்றும் 12 வயதுடைய சிறுவன் ஆகியோரே காணாமல்போயுள்ளனர்.

இது தொடர்பில் அந்தப் பிள்ளைகளின் தந்தையாரால் ஹைபொரெஸ்ட் பொலிஸ் நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை (27) முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர்களைத் தேடும் நோக்கில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். எனினும், நேற்று மாலை வரை அவர்கள் எங்கு சென்றார்கள் என்ற விபரம் அறியமுடியவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

## பொலிஸ்...

வடமேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் புத்தளம் பிரதி பொலிஸ்மா அதிபர், புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், ஆனமடுவ பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் ஆனமடுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட சிலர், உடன் அமுலுக்கு வரும்வகையில் பொலிஸ் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் (28) இரவு முதல் அமுலுக்கு வரும் வகையில், பொலிஸ் மா அதிபரினால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடமேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எல்.எஸ்.பதிநாயக்க, புத்தளம் பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.வை.எம். செனவிரத்ன, புத்தளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புஷ்பகுமார, ஆனமடுவ பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.சி.பி. ஹேரத் மற்றும் ஆனமடுவ பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிலந்த ஆர். பண்டார ஆகியோரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு இவ்வாறு ஒரே நேரத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டமை, இதுவே முதல் முறையாகும்.

நவகத்தேகம பொலிஸ் நிலையத்தின் கான்ஸ்டபிள் ஒருவர், கடந்த 22ஆம் திகதி ஆனமடுவ, ஆலங்குளம் பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் சிலரினால் தாக்கப்பட்ட சம்பவத்தை சமாதானத்துக்கு கொண்டுவராமல், நீதிமன்றம் வரை சென்றதை அடிப்படையாகக்கொண்டே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இரண்டு பேரை...

வெட்டி காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட இருவருக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ் மரணதண்டனை வழங்கி நேற்று புதன்கிழமை (29) தீர்ப்பளித்தார்.

மட்டக்களப்பு கோவிந்தன் வீதியில் அமைந்திருந்த கட்சி காரியாலயத்தில் கடந்த 1997ஆம் ஆண்டு பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றி வந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கட்சி ஆதரவாளர் ஒருவருமாக இருவருக்கும் கட்சி செயலாளருக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கு காரணமாக கடந்த 1997.07.17 அன்று பாதுகாப்பு உத்தியோகத்தரும் கட்சி ஆதரவாளரும் இணைந்து காரியாலயத்தில் தங்கியிருந்த கட்சி செயலாளர் மீதும் அவரது குடும்பத்தினர் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் மீது குண்டுத்தாக்குதல் மற்றும் வாளால் வெட்டியும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் கட்சி செயலாளரின் 3 வயது பிள்ளையான கிறேமன் கிஷான் மற்றும் கட்சி உறுப்பினரான சந்திரகுமார் ஆகிய இருவரும் உயிரிழந்ததுடன் பிரபாகரன் அவரது மனைவி மற்றும் கட்சி ஆதரவாளர்கள் இருவர் உட்பட 4 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் யோகநாதன் என்பவர் ஒரு கையையும் புவிராஜசிங்கம் என்பவர் இரு கைகளையும் இழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தாக்குதலை மேற்கொண்ட முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் சமீல ரஜீந்தர, கட்சி ஆதரவாளரான விவேகமூர்த்தி ஆகிய இருவரையும் கைது செய்து பின்னர் நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ள நிலையில் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் தொடர்ந்து கடந்த 25 வருடங்களாக வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணை மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம். அப்துல்லாஹ் முன்னிலையில் நேற்று எடுக்கப்பட்டபோது அரச சார்பில் அரச சட்டத்தரணி கலாநிதி ஷஹான் முஸ்தபாவும் பிரதிவாதிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணியின் ஆலோசனைக்கிணங்க சட்டத்தரணிகள் ஆஜராகி வாதாடினர்.

இதனையடுத்து, நீதிபதி குறித்த இருவரும் மனிதப் படுகொலை மற்றும் காயத்தை ஏற்படுத்தியமை போன்ற 6 குற்றச்சாட்டுகளில் தலா ஒருவருக்கு 3 இலிருந்து 5 வரையான குற்றச்சாட்டுக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமும் 10 வருட கடூழிய சிறைத்தண்டனையும், 6 குற்றச்சாட்டுகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும் 10 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத் தண்டனையும் முதலாவது இரண்டாவது குற்றச்சாட்டுகளுக்கு மரணதண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

## எரிபொருள் விலை...

ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 60 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 340 ரூபாவாகும்.

லங்கா டீசல் ஒரு லீற்றரின் விலை 80 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 325 ரூபாவாகும்.மேலும், 95 வகையைச் சேர்ந்த ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 135 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 375 ரூபாவாகும். ஒரு லீற்றல் சுப்பர் டீசலின் விலை 45 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 465 ரூபாவாகும். மண்ணெண்ணெய் 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 295 ரூபாவாகும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். அமைச்சில் நேற்று (29) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் அனுமதியுடனேயே இந்த விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது. ஏபரல் மாதம் முதலாம் வாரத்திலேயே இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்படவிருந்தது. இருந்தபோதும், தற்போது மக்கள் எரிபொருள் வரிசைகளில் காத்திருக்கிறார்கள். அதன் காரணமாக இந்த நிவாரணத்தை விரைவாக பெற்றுக்கொடுக்கத் தீர்மானித்தோம். அதற்கமைய, அடுத்த விலை சூத்திரம் மே மாதம் முதலாம் திகதியே திருத்தப்படும்.

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி மேற்கொள்ளப்படவிருந்த எரிபொருள் விலை சூத்திரத்தையே, மூன்று நாட்களுக்கு முன்னரேயே பெற்றுக்கொடுத்துள்ளோம். எனவே, இன்று (நேற்று)எரிபொருளுக்கான கோரிக்கையை முன்வைக்கும் பிணைமுறியாளர்களுக்கு ஏற்படும் நட்டத்தில் ஒரு பங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தினால் பொறுப்பேற்கவும் தயாராக இருக்கிறோம்.

எனவே, இன்றிலிருந்து புதிய விலையில் எரிபொருளை கொள்வனவு செய்யலாம். கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட விலை திருத்தம் மற்றும் தற்போதைய திருத்தத்தினூடாக பாரிய விலைக்குறைப்பு இடம்பெற்றுள்ளது. மேலும், போக்குவரத்து சங்கங்கள், முச்சக்கரவண்டி சங்கம், உணவு சங்கங்களும் இந்த விலைக் குறைப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## விலையுயர்ந்த...

அந்நாட்டுக் குழுவொன்று பின்தங்கிய பாடசாலையொன்றை தெரிவுசெய்து கற்றல் உபகரணங்களை வழங்குவதற்கு தீர்மானித்தது. அதன் பிரகாரம் பண்டாரவளையில் உள்ள பாடசாலையொன்றை தெரிவுசெய்யுமாறு விடுதியொன்றின் உரிமையாளரை ஆங்கிலேயர் ஒருவர் கோரியுள்ளார்.

விடுதி உரிமையாளரும் பண்டாரவளையில் உள்ள பின்தங்கிய பாடசாலையொன்றை தெரிவுசெய்து உரிய ஏற்பாடுகளை செய்துள்ளார். இலங்கைக்கு வந்த ஆங்கிலேயர்கள் குழு சுமார் மூன்று இலட்ச ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை வாங்கிக்கொண்டு பாடசாலைக்குச் சென்றது.

அங்கு சிறிய விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அதனை மாணவர்களும் பெற்றோரும் தமது கையடக்கத் தொலைபேசிகளில் படம், காணொளி எடுத்துள்ளனர். இறுதியாக ஆங்கிலேயருக்கு உரையாற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

"இங்கே, மாணவர்களும் பெற்றோரும் பயன்படுத்தும் கையடக்கத் தொலைபேசிகளை பார்த்து வியக்கிறேன். விலை உயர்ந்த தொலைபேசிகள் அவை. இந்த மாணவர்கள் பொருளாதார நெருக்கடியில் இருப்பதாகத் தெரியவில்லை" என அவர் தெரிவித்துள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகள் ஒருவரது மதிப்பு மிக்க நேரத்தை வீணடிக்கிறது. அந்தத் தொலைபேசிகளிலிருந்து நல்லவற்றை மாத்திரமே நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மருந்து உற்பத்தியை 50 வீதத்தால் கூட்ட 12 புதிய தொழிற்சாலைகள் அமைக்க தீர்மானம்



2025ஆம் ஆண்டளவில் நாட்டின் மருந்து உற்பத்தியை 50 சதவீதமாக உயர்த்த முடியுமென சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

மருந்து உற்பத்தியை 50 வீதத்தால் அதிகரிக்க 12 புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதற்காக சுமார் 200 மில்லியன் டொலர் முதலீடுகள் வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் தனியார் துறையின் முன்னணி சுகாதார சேவை வழங்குனர்களில் ஒன்றான 'நவலோக மெடிகேர் (தனியார்) நிறுவனம்' என்ற பெயரில் நீர்கொழும்பில் நிறுவப்பட்டுள்ள அதிநவீன மருத்துவமனை கட்டடத்தை சிகிச்சை சேவைகளுக்காக அண்மையில் திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது இந்த நாட்டில் மருந்து உற்பத்தி 14 வீதத்திற்கும் 15 வீதத்திற்கும் இடையில் உள்ளதாகவும், அதனை அதிகரிப்பது இலகுவான விடயம் அல்ல எனவும், ஆனால், அந்த சவாலை எதிர்கொள்ளும் திறன் அமைச்சுக்கு இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சுகாதாரத்துறையில் புதிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பது அதிக முதலீடாக இருக்க வேண்டும் எனவும் அவ்வாறான முதலீடு இலாப கரமானதாக அமையாது என எதிர்பார்க்கப்பட்டாலும் சவால்களை சமாளிப்பது இலகுவானதல்ல எனவும் சுகாதார அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.


இலங்கையில் மருந்து உற்பத்தி செயன்முறைக்கு வரிச்சலுகை உள்ளிட்ட ஊக்கத்தொகைகள் வழங்கப்படும். இலங்கையில் மருந்து உற்பத்திக்குத் தேவையான 30 முதல் 35 வீதமான மூலப்பொருட்களை கொண்டுவருவதில் சிரமம் இருப்பதாகவும், அதனை சமாளிக்கும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகில் எந்தவொரு நாடும் அனைத்துப் பொருட்களையும் தனது நாட்டில் உற்பத்தி செய்வதில்லை. அபிவிருத்தியடைந்த நாடுகள் கூட சில பொருட்களை வேறு நாடுகளிலிருந்து கொண்டுவருவதாகவும் இவ்வாறான நிலையில், இந்த நாட்டில் 50 வீதமான மருந்து உற்பத்தி மிகவும் நல்ல இலக்காகும் எனவும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய கல்வித் திட்டத்தில் STEAM கல்விமுறையை அறிமுகப்படுத்தும் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு






உலக நாடுகளில் பின்பற்றப்படும் STEAM (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், சமூகக் கல்வி, கணிதம்) கல்வி முறையை தேசிய கல்வித் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் இந்தக் கல்வி முறையின் உத்தியோகபூர்வ அங்குரார்ப்பண நிகழ்வு நாளை (31) இடம்பெற வுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (28) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1999ஆம் ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியம், மாணவர்கள் வகுப்பறை கற்றல் நடவடிக்கைகளினால் பெறும் ஆற்றல், சுற்றுச்சூழலில் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் என்பன தொடர்பில் ஆராய்ச்சியொன்றை மேற்கொண்டிருந்தது. அந்த ஆய்வில் 35 சதவீதமான ஆற்றலை வகுப்பறையில் இடம்பெறும் கற்றல் நடவடிக்கைகளினூடாக பெற்றுக்கொள்வதாகவும், 35 சதவீத ஆற்றலை சுற்றுச்சூழலினூடாக பெற்றுக்கொள்வதாகவும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

2001ஆம் ஆண்டாகும்போது விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் என்ற பாடங்களை அடிப்படையாகக்கொண்டு STEM என்ற முறையைக் கையாண்டது. அதன்பின்னர் ஐரோப்பிய நாடுகள், ஆசிய நாடுகள் என 96 நாடுகளில் இந்தக் கல்விமுறை பின்பற்றப்படுகின்றது.

ஆனால், எமது நாட்டில் இந்த STEM என்ற கற்றல் நடவடிக்கை இல்லை. அண்மையில் இந்தக் கல்வி முறையில் A என்ற ஆங்கில எழுத்தையும் இணைத்துக்கொண்டுள்ளார்கள். A என்பது சமூகக் கல்வித் துறையை குறிக்கிறது.

அமெரிக்காவில் இந்தக் கல்விமுறை 20 வருடங்களாக அமுல்படுத் தப்பட்டு வருவதுடன், அந்த நாட்டில் தேசிய வருமானத்தில் STEAM கல்வி முறையினூடாக உருவானவர்களாக இருக்கிறார்கள்.

எனவே, நவீன கல்வித் துறைக்கு இந்த STEAM கல்வி முறை அவசியமானதாக இருக்கிறது. இலங்கையிலும் இந்தக் கல்வி முறையை அமுல்படுத்த எதிர்பார்த்துள்ளோம். பாடசாலை வகுப்புகளில் இடம்பெறும் கற்பித்தல் நடவடிக்கைகள், மேலதிக வகுப்புகளில் இடம்பெறும் கற்பித்தல் நடவடிக்கைகளில் குறிப்பிடப்படும் பாடங்களை மனப்பாடம் செய்து பரீட்சைக்கு எழுதுவதை மாத்திரமே மாணவர்கள் பின்பற்றி வருகிறார்கள். வேறு எந்த நாடுகளிலும் இந்த முறை இல்லை.

இந்த முறை கஷ்டமானதும் இல்லை. விரைவாக ஆசிரியர்கள் இந்த முறையை அமுல்படுத்துவார்கள். ஆனால், அதற்கான அனுமதி அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கவே நாங்கள் முயற்சிக்கிறோம் - என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் பங்குனி மாதம் 16ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்:** நண்பர்கள் மூலம் நீங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும், வீடு, வாகன லாபங்கள் அமையும்.

**ரிஷபம்:** சமயோசிதமான புத்தியால் அனைத்தையும் சாதிப்பீர்கள், அவசிய செலவுகளை செய்வீர்கள்.

**மிதுனம்:** பேச்சினால் பிழைப்பவர்களுக்கு புகழ், கௌரவம் உண்டு, அரச வகையில் நன்மைகள் உண்டு.

**கடகம்:** போட்டிப் பந்தயங்களில் வெற்றிவாகை சூடுவீர்கள், திடீர் தன வரவு ஏற்படும்.

**சிம்மம்:** வீண் டென்ஷனால் குழம்பித் தவிப்பீர்கள், உடல் நலத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

**கன்னி:** தரும சிந்தனையுடன் செயலாற்றுவீர்கள், நினைத்தது நடக்கும், லாபம் உண்டு.

**துலாம்:** தொழில்துறையில் சாதனை படைக்கும் நாள், முக்கியமான சில முடிவுகளை எடுப்பீர்கள்.

**விருச்சகம்:** எதிர்காலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய நாள். பயணங்களால் செலவுகள்.

**தனுசு:** மௌனம் காத்து, ஆலய வழிபாடு செய்வதால் மனநிம்மதி உண்டு, தூரப்பயணங்கள் வேண்டாம்.

**மகரம்:** அவசர முடிவுகள் எதையும் எடுக்காமல் இருப்பது நல்லது, பெண்களால் உதவிகள் உண்டு.

**கும்பம்:** கோபங்களை அடக்கிக் கொள்வதால் வீண் பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்ளலாம், செலவுகள் அதிகம்.

**மீனம்:** தெளிந்த மனதுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புகள் நிறைந்த நன்நாள்.

**திதி** : நவமி பி.ப.11.30 வரை பின் தசமி

**நட்சத்திரம்** : புனர்பூசம் பி.ப.10.59 வரை பின் பூசம்

**யோகம்** : அமிர்தசித்த யோகம் (சுப காரியம் நன்மை)

**வார சூலை** : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப.11.10 - 12.10 மணி வரை

**ராகு காலம்** : 1.40 - 3.10 மணி வரை

**எமகண்டம்** : 6.10 - 7.40 மணி வரை

**குளிகை** : 9.10 - 10.40 மணி வரை

**சந்திராஷ்டமம்** : விருச்சிக,தனு ராசியினர் எச்சரிக்கை அவசியம்

**தன அதிர்ஷ்டம்** : திருவாதிரை, சுவாதி, சதயம்(பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** : ஸ்ரீராம நவமி

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

# 165 கிலோ கேரள கஞ்சா மீட்பு

மாதகல் கடற்படையினரால் நேற்று முன்தினம் (28) மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 165 கிலோவிற்கும் அதிகமான கேரள கஞ்சாவை கைப்பற்றியுள்ளனர்.

மாதகல் கடற்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ரோந்துப் பணியின்போது, கடற்கரையில் விட்டுச்செல்லப்பட்ட 08 சந்தேகத்திற்கிடமான பொதிகளை மீட்டுள்ளனர், அதில் சுமார் 150 கிலோ 390 கிராம் எடையுள்ள 71 கேரள கஞ்சா பொதிகள் அடைக்கப்பட்டிருந்தன.

இதற்கிடையில், அதே நாளில் மாதகல் அருகே நடத்தப்பட்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையில், மாதகல் கடல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான பொதி ஒன்று சிக்கியது. மீட்கப்பட்ட பொதியிலிருந்து சுமார் 15 கிலோ 05 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

# தேயிலையின் விலை 200 ரூபாவால் வீழ்ச்சி

டொலரின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் ரூபாவின் பெறுமதி உயர்வினால் ஒரு கிலோ தேயிலைக்கான (தேயிலைத் தூள்) விலை 200 ரூபாவினால் குறைந்துள்ளதாக தோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உலக சந்தையில் ஒரு கிலோ மலையக தேயிலை 1,250 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டதாகவும், தற்போது அது 1,050 ரூபாவாக குறைந்துள்ளதாகவும் தோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

டொலரின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்தால் தேயிலையின் விலை மேலும் வீழ்ச்சியடையும் எனவும், இதனால் தேயிலை கைத்தொழில் கடுமையாக பாதிக்கப்படும் எனவும் தோட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மின்கட்டண அதிகரிப்பு காரணமாக ஒரு கிலோ தேயிலை உற்பத்திக்கு அதிக செலவை சுமக்கவேண்டியுள்ள நிலையில், ஒரு கிலோ தேயிலைக்கு பெறப்படும் தொகை குறைவடைந்துள்ளமையினால் தேயிலை கைத்தொழில் கடும் ஆபத்தில் உள்ளதாக தோட்ட அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# யாழ். – திருநெல்வேலியில் சைவச் சிறுவர் இல்லம் தாக்கப்பட்டமையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்





யாழ்ப்பாணம் – திருநெல்வேலியில் சைவச் சிறுவர் இல்ல அலுவலகம் மற்றும் விடுதி, சேதமாக்கப்பட்டமையை கண்டித்து நேற்று (29) கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சைவச் சிறுவர் இல்லத்தில் முகாமையாளராக கடமையாற்றிய நபர் சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள சிறுவர்களை உடல்ரீதியாக துன்புறுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை அடுத்து இல்ல நிர்வாகத்தினரால் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

பணிநீக்கம் செய்யப்பட்ட பின்னரும், விடுதியிலிருந்து வெளியேறாது தொடர்ந்து விடுதியில் தங்கியிருந்தமையால் கடந்த திங்கட்கிழமை விடுதி நிர்வாகத்தினர் நீதிமன்றை நாடியதையடுத்து, முகாமையாளர் உடனடியாக விடுதியிலிருந்து வெளியேற வேண்டும் என நீதிமன்று கட்டளையிட்டது.

இந்நிலையில், திங்கட்கிழமை மாலை சில மாணவர்கள் இல்ல விடுதியின் சில பகுதிகளையும், இல்ல அலுவலகத்தினையும் அடித்து நொறுக்கி பொருட்களுக்கு சேதங்களை ஏற்படுத்தி இருந்தனர்.

தம்மால் பணிநீக்கம் செய்யப்பட்ட முகாமையாளரின் தூண்டுதலில்தான் மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர் என இல்ல நிர்வாகம் குற்றஞ்சாட்டியிருந்தது.

இந்நிலையில், நேற்று (29) சிறுவர் இல்லத்தின் முன்பாக, பழைய மாணவர்கள், ஊரவர்கள் சிலர் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

# செயற்கை நுண்ணறிவு காரணமாக உலகில் 300 மில்லியன் பேர் தொழில் இழக்கும் அபாயம்

வளர்ந்துவரும் செயற்கை நுண்ணறிவு காரணமாக எதிர்காலத்தில் உலகில் 300 மில்லியன் பேர் தொழில்வாய்ப்பை இழக்கும் வாய்ப்புள்ளதாக சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

உலகப் பொருளாதார மன்றத்தின் அறிக்கையின்படி, 2025ஆம் ஆண்டுக்குள் உலகளவில் வாகனத்துறையில் 85 மில்லியன் வேலைகள் செயற்கை நுண்ணறிவால் இழக்கப்படும்.

எதிர்காலத்தில், சுகாதாரம், இசை, மருத்துவம் ஆகிய துறைகளும் செயற்கை நுண்ணறிவால் ஆட்கொள்ளப்பட்டு, ஏராளமானோர் வேலை இழக்க நேரிடும் என அந்த ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

செயற்கை நுண்ணறிவு காரணமாக சுமார் 300 மில்லியன் வேலைகள் இழக்கும் அபாயம் இருந்தாலும், செயற்கை நுண்ணறிவு புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்கும் சாத்தியமும் உள்ளதாக அறிக்கை காட்டுகிறது.

# யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையத்தின் பெண்கள் கௌரவிப்பு



யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் மகளிருக்கான தினம் நேற்று (29) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

ஒன்றிணைந்த செயற்பாடுகளினூடாக சமத்துவத்தை உறுதிசெய்வதுடன், பெண்களின் வலுவூட்டலை மேம்படுத்தல் எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது வடமாகாணத்தில் சாதித்த 11 பெண்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி வைத்தியர் இ.சுரேந்திரகுமார், சட்டத்தரணி மாதுரி நிரோசன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டயலொக் 12ஆவது தடவையாகவும் ஆண்டின் பிரபல தொலைத்தொடர்பு வர்த்தக நாமம் விருதை வென்றுள்ளது




2023 SLIM KANTHAR மக்கள் விருது விழாவில், டயலொக் நிறுவனம் தொடர்ச்சியாக 12ஆவது தடவையாகவும் ஆண்டின் பிரபலமான தொலைத்தொடர்பு வர்த்தக நாமம் என்ற விருதை வென்றுள்ளது. இலங்கையர்களின் வாழ்வில் தனித்துவமான தாக்கத்தை ஏற்படுத்திய வர்த்தக நாமங்களை அங்கீகரிக்கும் SLIM KANTHAR மக்கள் விருதுகள், இலங்கை மக்களின் இதயங்களுடன் இணைந்த வர்த்தக நாமங்களுக்கு விருதுகளை வழங்கி வருகின்றது.

அதற்கமைய, இலங்கை மக்களின் வாழ்க்கையையும், வர்த்தகங்களையும் வலுவூட்டி, நாட்டின் புத்தாக்கம் மற்றும் டிஜிட்டல் மாற்றத்திற்கான முன்னோடி பணியை நிறைவேற்றுவதன் மூலம், ஆண்டின் பிரபலமான தொலைத்தொடர்பு வர்த்தக நாமம் என்ற விருதை பெறுவதன் மூலம், நாட்டை டிஜிட்டல் மயமாக்கலுடன் வலுவூட்டுவதற்கான டயலொக்கின் அர்ப்பணிப்பு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

SLIM KANTHAR மக்கள் விருது விழாவில் டயலொக்கின் இந்த தனித்துவமான சாதனை குறித்து கருத்து தெரிவித்த டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி அமலி நாணாயக்கார, "12ஆவது தடவையாகவும் ஆண்டின் பிரபலமான தொலைத்தொடர்பு வர்த்தக நாமம் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்படுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தவும், என்றும் மங்காத ஒரு அர்த்தமுள்ள இணைப்பை உருவாக்கவும் நம்மால் முடிந்துள்ளதை பெருமையாகவும் கருதுகிறோம். எதிர்காலம் இன்றே எனும் நமது வர்த்தக நாம தொனிப்பொருளுக்கமைய உண்மையாகவே, எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதில் எங்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கான சான்றாக இந்த விருது அமைந்துள்ளது. எங்கள் வாடிக்கையாளர்களின் விருப்பமான தொலைத்தொடர்பு சேவை வழங்குநராக எங்களைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் எங்கள் மீது காட்டப்படும் நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்திற்கு நாங்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோம்" என்றார்.

SLIM KANTHAR மக்கள் விருது வழங்கும் விழா இந்த ஆண்டு 17ஆவது முறையாக நடைபெற்றது, மேலும் இந்த விழாவை நாட்டின் சந்தைப்படுத்தலுக்கான தேசிய நிறுவனமான Sri Lanka Institute of Marketing (SLIM) ஏற்பாடு செய்திருந்தது. பல்வேறு துறைகளில் மக்களின் விருப்பப்படி வழங்கப்படும் இந்த விருதுகளுக்காக நாடு முழுவதும் கணக்கெடுப்பு நடத்தப்படுவதுண்டு.

15 முதல் 60 வயதுக்குட்பட்ட ஆண்களும் பெண்களும் இந்த கணக்கெடுப்பில் பங்கேற்பார்கள், மேலும் 5 மாத காலப்பகுதியில் நடத்தப்படும் இந்த செயல்முறையின்போது, கணக்கெடுப்பில் பங்களிக்கும் நபர்களுக்கு ஒரு கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்து வழங்கப்படும். இலங்கை மக்களின் இதயங்களுக்கு நெருக்கமான வர்த்தக நாமங்கள் மற்றும் ஆளுமைகள் இந்த விருது வழங்கும் விழாவில் அங்கீகரிக்கபட்டு கௌரவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

யாழ். மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்புரை சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான நோயாளர்களைத் தெரிவுசெய்யும் நான்காவது கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் 01.04.2023 சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே, கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, மார்ச் 30ஆம் திகதி, வியாழக்கிழமை

# அரசியல் பின்புல போராட்டங்கள் அடக்கப்பட வேண்டியது அவசியம்!

எரிபொருள் விநியோகத்தில் இடையூறு ஏற்படுத்திய காரணத்தால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கத் தலைவர்கள் உட்பட 20 ஊழியர்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று அறிவித்திருக்கிறார்.

எரிபொருள் விநியோகத்தை சீர்குலைக்கும் தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் தொழிலாளர்களை கட்டாய விடுமுறையில் அனுப்பத் தீர்மானித்துள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்றுக் காலையில் அறிவித்திருந்த அதேவேளை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் களஞ்சிய முனையங்களுக்குள் இத்தகைய தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் தொழிலாளர்கள் நுழைவதைத் தடைசெய்யவும் முடிவு செய்துள்ளதாகக் கூறியது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தனியார் மயமாக்கலுக்கு எதிராக தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கடந்த திங்கட்கிழமை வேலைநிறுத்தத்தைத் தொடங்கினர். இது எரிபொருள் விநியோக செயன்முறையை பாதித்தது.

எரிபொருள் விநியோகத்தில் பொலிஸாரும் ஆயுதப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில், எரிபொருள் தட்டுப்பாடு குறித்து அச்சமடைய வேண்டாமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல முனையங்களில் போதியளவு எரிபொருள் இருப்பு இருப்பதாக உறுதியளிக்கப்பட்டது. நேற்றுக் காலை 6.00 மணிக்கு எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து நாட்டில் எரிபொருள் விநியோகம் தொடர்பான அச்சம் தணிந்தது. எரிபொருள் விலைகளைக் குறைக்க அரசாங்கம் நேற்று விடுத்த அறிவிப்பும் மக்களுக்கு சற்று ஆறுதலைத் தந்தது என்றால் மிகையில்லை.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார்மயப்படுத்துவதற்கு எதிராக பெற்றோலிய தொழிற்சங்கத்தினர் சத்தியாகிரகத்தையும் முன்னெடுத்தனர். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சேவையை பெற்றுக்கொள்ளும் அதிக வருமானம் கொண்ட சுமார் 600 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நான்கு சர்வதேச நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இதனைத் தவிர வடக்கு, கிழக்கிலுள்ள இந்திய ஐ.ஓ.சி. நிறுவனங்களுக்கான எண்ணெய் விநியோகத்தை முழுமையாக நிறுத்துமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேசமயம் மூன்று வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையின் எரிபொருள் சந்தைக்குள் பிரவேசிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இந்த அனுமதியின் பிரகாரம், சீனாவின் Sinopec, அவுஸ்திரேலியாவின் United Petroleum, அமெரிக்காவின் RM Parks ஆகிய மூன்று நிறுவனங்கள் இலங்கையின் எரிபொருள் சந்தைக்குள் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

தகுந்த நிறுவனங்களை தெரிவுசெய்வதற்கான அபிப்பிராயத்தை கேட்டறியும் வகையில் மின்சக்தி, எரிசக்தி அமைச்சு விடுத்த அறிவித்தலுக்கு அமைய தெரிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்யவும், விநியோகிக்கவும், விற்பனை செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனங்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாகவுள்ள எரிபொருள் நிலையங்கள் மற்றும் எதிர்காலத்தில் அமைக்கப்படவுள்ள எரிபொருள் நிலையங்களைப் பயன்படுத்தி வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபட முடியும். பெற்றோலிய மொத்த களஞ்சிய நிறுவனத்தின் அடிப்படை வசதிகளை கட்டணம் செலுத்தி பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பமும் இந்த நிறுவனங்களுக்குக் கிடைக்கவுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு பிரசுரித்த அறிவித்தலுக்கு அமைய, இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்த பின்னர் குறித்த நிறுவனங்களின் தேவைகளுக்கு அமைய, புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள், புதிய களஞ்சிய முனையங்களை ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த மூன்று நிறுவனங்களுக்கும் தற்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் விற்பனை முகவர்கள் நடத்திச் செல்கின்ற 450 எரிபொருள் நிலையங்களை ஒதுக்கிக் கொடுக்கவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். இந்த நிறுவனங்கள் இலங்கைக்கு வருகை தந்த பின்னர் புதிதாக தலா 50 எரிபொருள் நிரப்பு நிலையங்களை ஸ்தாபிக்கவும் அனுமதி கிடைக்கவுள்ளது.

குறித்த மூன்று நிறுவனங்களுக்கும் வழங்கப்படவுள்ள அனுமதிப்பத்திரம் ஊடாக, 20 வருடங்களுக்கு இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளை மேற்கொள்ளவும், களஞ்சியப்படுத்தவும், விநியோகிக்கவும், விற்பனை செய்யவும் அனுமதியளிக்கப்படவுள்ளது. மறுபுறம் Lanka IOC நிறுவனமும் அடுத்த மாதம் புதிதாக 34 எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திறக்கவுள்ளது.

எரிபொருள்துறையில் தனியார்துறையினர் உள்வந்தால் எரிபொருட்களின் விலை கணிசமான அளவு குறையுமென தெரிந்தும், போராட்டம் என்ற பெயரில் தொழிற்சங்கங்கள் நடத்தும் அராஜகத்திற்கு முடிவு கட்டும் வகையில் படையினரை பயன்படுத்தி சேவைகளை முன்னெடுக்கவும், சீர்குலைவை ஏற்படுத்த முயன்ற 20 பேருக்கும் மேற்பட்ட பணியாளர்களை கட்டாய விடுமுறையில் அனுப்பவும் அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானங்கள் வரவேற்புக்குரியவை.

நாடு இந்தளவு பொருளாதாரப் பின்னடைவை சந்திப்பதற்கு தொழிற்சங்கங்களின் தேவையற்ற போராட்டங்கள் காரணமென்பதே வரலாறு. அந்த வரலாறில் உள்ள பட்டறிவைக் கொண்டு நாட்டை புதிய சிஸ்டம் ஒன்றை நோக்கி ஜனாதிபதி ரணில் எடுத்துச் செல்லவேண்டும். நியாயமான கோரிக்கைகள் தவிர்ந்த, சாதாரண பொதுமகன் பாதிக்கப்படும் வகையில் அரசியல் காரணங்களுக்காக செய்யப்படும் போராட்டங்கள் அடக்கப்பட வேண்டும். மக்களின் எதிர்பார்ப்பும் அதுவே.



## இறுதி யுத்தத்தில் புலிகளோடு இணைந்து

# தமிழ் மக்களும் இராணுவத்திடம் சரண்!

## சரணடைந்த புலிகளின் தகவல்கள் எதுவும் இல்லை; சர்ச்சைக்குரிய சாட்சியத்தை வழங்கியது இராணுவம்

**பா.நிரோஸ்**

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து தமிழ் மக்களும் இறுதி யுத்த காலத்தில் சரணடைந்ததாக இலங்கை இராணுவம் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு முன்பாக சாட்சியம் வழங்கியதோடு, இறுதி யுத்த காலத்தில் சரணடைந்த புலிகள் தொடர்பான தகவல்கள் இராணுவத்திடம் இல்லை எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

இறுதி யுத்த காலத்தில் இராணுவத்திடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான பல்வேறு தகவல்களைக் கோரி 2019.04.04 அன்று இலங்கை இராணுவத்துக்கு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்த விண்ணப்பத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் எவரும் இறுதி யுத்தக் காலப் பகுதியில் இலங்கை இராணுவத்திடம் சரணடையவில்லை. இலங்கை அரசாங்கத்திடமே சரணடைந்தார்கள் என இராணுவம் சர்ச்சைக்குரிய பதிலை வழங்கியிருந்தது.

இந்த பதிலில் திருப்தியில்லை என்பதால் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் 2019.10.03 அன்று மேன்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மேன்முறையீடு நேற்று முன்தினம் (28 செவ்வாய்க்கிழமை) 4ஆவது தடவையாக தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் நீதியரசர் உபாலி அபேரத்ன தலைமையிலான ஐவர் அடங்கிய ஆணைக்குழு முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இராணுவம் மேற்கண்டவாறு சாட்சியம் வழங்கியது,

ஆணைக்குழு முன்பாக நடைபெற்ற கடந்த மூன்று விசாரணைகளின்போதும் சூம் தொழில்நுட்பம் ஊடாக இணைந்திருந்த இராணுவம் முதன்முறையாக ஆணைக்குழுவின் உத்தரவுக்கு அமைய நேரில் ஆஜராகி சாட்சியம் வழங்கியது.

இதன்படி பிரிகேடியர் ஆர்.டி.ஓ.பத்திரணகே, லுடினன் கமாண்டர் டி.சி.கே.டபிள்யூ.ரணசிங்க, மேஜர் பி.டி.ஜே.ஜயவீர ஆகியோர் இராணுவத்தின் சார்பில் ஆணைக்குழு முன்பாக முன்னிலையாகியிருந்தனர்.

மேன்முறையீட்டாளரான ஊடகவியலாளர் பா.நிரோஸ் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் மற்றும் சட்டத்தரணிகளான சுவஸ்திகா அருலிங்கம், பஷான் ஜயசிங்க, ரணிதா, ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன ஆகியோர் ஆஜராகியிருந்தனர். விசாரணையில் இடம்பெற்றவை பின்வருமாறு:-

**இராணுவம் -** இறுதி யுத்த காலத்தின்போது சிவில் மக்கள் எந்தவிதமான உதவிகளுமற்று இருந்தார்கள் என்பது எமக்கு தெரியும். அவர்களால் குறைந்தபட்சம் இராணுவத்தினரிடம் சரணடையக்கூட முடியாமல் இருந்தார்கள்.

**சட்டத்தரணி ரட்ணவேல் -** சிவில் மக்கள் இராணுவத்திடம் சரணடையவில்லை. மாறாக தமிழீழ விடுதலைப் புலிகளே சரணடைந்தார்கள்.

**இராணுவம் -** இல்லை, இல்லை. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கும் புலிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன என்பது எமக்குத் தெரியும். அதனை எங்களால் புரிந்துகொள்ளவும் முடிகிறது. ஆனால், சிவில் மக்களும் புலிகளும் ஒன்றாக இணைந்து இராணுவத்திடம் சரணடந்தார்கள்.

**ஆணையாளர் கிஷாலி -** சரணடைந்தவர்கள் என்கிறபோது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அப்பால் சரணடைந்தவர்களையும் இராணுவம் கருத்திற்கொள்கிறதா?

**இராணுவம் -** ஆம்.

**சட்டத்தரணி ரட்ணவேல் -** இது தவறு. புலிகள் மாத்திரமே சரணடைந்தார்கள். சிவில் மக்கள் சரணடையவில்லை.

**ஆணைக்குழுவின் தலைவர் -** சரணடைந்தவர்கள் என்பதில் முரண்பாடு இல்லை. சரணடைந்தவர்கள் தொடர்பான தகவல் பட்டியல் இராணுவத்திடம் இருக்கிறதா என்பதே பிரச்சினை.

இதன்போது சட்டத்தரணிகளான ரட்ணவேல், சுவஸ்திகா அருலிங்கம் ஆகியோர் இறுதி யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்திடமே சரணடைந்தனர் என்பதற்கான ஆதாரங்களையும் புலிகள் சரணடையும் போது இராணுவம் பதிவுகளை மேற்கொண்டமைக்கான ஆதாரங்களையும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தனர். இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் தொடர்பான பதிவுகள் இருப்பதற்கான ஆதாரங்களையும் வழங்கினார்கள்.

இதற்கு இராணுவம் வழங்கிய பதில் பின்வருமாறு:-

**இராணுவம் -** சிவில் மக்களும், புலிகளும் இராணுவத்திடம் சரணடையும்போது பல்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்று கொண்டிருந்தன. எனவே, சரணடைந்தவர்களை பதிவு செய்வதற்காக பேனா, பேப்பர்களை எடுத்துகொண்டு செல்ல வேண்டும் என்பது பற்றியெல்லாம் சிந்தித்துக்கொண்டு இருக்க முடியாது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் நோக்கிவந்தர்களை நீங்கள் புலிகளா அல்லது பொதுமக்களா என கேட்கவில்லை. எங்களிடம் வந்த அனைவரையும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைத்தோம். புனர்வாழ்வுக்கு உட்படுத்திய ஆயிரக்கணக்கானோரின் புகைப்படங்கள் மற்றும் தகவல்களே உள்ளன. அவற்றை தகவலறியும் ஆணைக்குழுவுக்கும் வழங்கியிருக்கிறோம். இதனை தவிர வேறு எதனையும் கூறுவதற்கு இல்லை.

இவ்வாறான நிலையில். இராணுவத்தினருக்கும் மேன்முறையீட்டாளரான ஊடகவியலாளர் பா.நிரோஸ் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகளுக்கும் இடையில் நீண்ட வாத விவாதங்கள் இடம்பெற்றன.

அனைத்து விவாதங்களையும் ஆராய்ந்த ஆணைக்குழு தீர்ப்பு திகதியை அறிவிக்காது விசாரணையை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும், ஏப்ரல் 28ஆம் திகதிக்கு முன்னர் ஊடகவியலாளர் பா.நிரோஸ் மீண்டும் ஒரு எழுத்துமூல சமர்ப்பணத்தை வழங்க வேண்டும் எனவும் இதற்கு பதில் எழுத்துமூல சமர்ப்பணத்தை இராணுவம் மே 19ஆம் திகதிக்கு முன்னர் வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டது.

மே 19ஆம் திகதி யுத்தம் நிறைவடைந்து 14 வருடங்கள் நிறைவுபெறகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தவக்கால சிந்தனை

### "ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன்



அக்காலத்தில் இயேசு யூதர்களிடம், "என் வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். யூதர்கள் அவரிடம், "நீ பேய் பிடித்தவன்தான் என்பது இப்போது தெரிந்துவிட்டது. ஆபிரகாம் இறந்தார். இறைவாக்கினர்களும் இறந்தார்கள். ஆனால், என் வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார் என்கிறாயே! எங்கள் தந்தை ஆபிரகாமைவிட நீ பெரியவனோ? ஆபிரகாம் இறந்தார். இறைவாக்கினரும் இறந்தனர். நீ யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்றார்கள். இயேசு மறுமொழியாக, "நானே என்னைப் பெருமைப்படுத்தினால், அது எனக்குப் பெருமையில்லை. என்னைப் பெருமைப்படுத்துபவர் என் தந்தையே. அவரையே நீங்கள் உங்கள் தந்தை என்றும் சொல்கிறீர்கள். ஆனால், அவரை உங்களுக்குத் தெரியாது. எனக்கு அவரைத் தெரியாது என நான் சொன்னால் உங்களைப் போல நானும் பொய்யனாவேன். அவரை எனக்குத் தெரியும். அவருடைய வார்த்தையையும் நான் கடைப்பிடிக்கிறேன். உங்கள் தந்தை ஆபிரகாம் நான் வரும் காலத்தைக் காண முடியும் என்பதை முன்னிட்டுப் பேருவகை கொண்டார். அதனைக் கண்டபோது மகிழ்ச்சியும் கொண்டார்" என்றார். யூதர்கள் இயேசுவை நோக்கி, "உனக்கு இன்னும் 50 வயதுகூட ஆகவில்லை. நீ ஆபிரகாமைக் கண்டிருக்கிறாயா?" என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம், "ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். இதைக் கேட்ட அவர்கள் அவர் மேல் எறியக் கற்களை எடுத்தார்கள். ஆனால், இயேசு மறைவாக நழுவிக் கோவிலிலிருந்து வெளியேறினார்.

## நக்கல் நமசிவாயம்

பெற்றோலிய ஊழியர்கள் ஸ்ட்ரைக் நாளன்று ஆமிக்காரரைப் போட்டு எரிபொருள் விநியோகத்தை செய்தாராம் ரணில் ஐயா..! இந்த செய்திகளையெல்லாம் கோட்டா ஐயா பார்த்தார் என்றால் எப்படி இருக்கும் அவருடைய மனது..! என்ன நினைப்பாரா இருக்கும்..?



## இன்றைய நாளில்...

- 1831 – மானிப்பாயில் அமெரிக்க மிஷன் கட்டடங்கள் தீப்பிடித்து அழிந்தன.
- 1842 – அறுவை சிகிச்சைகளில் முதன்முதலாக ஈதர் மயக்க மருந்து குரோபோர்ட் லோங் என்பவரினால் பயன்படுத்தப்பட்டது.
- 1982 – கொலம்பியா விண்கலம் நியூ மெக்சிகோவில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது.

# மஸ்ஜித்களிலிருந்து சிறுவர்களை விரட்டாதீர்கள்..!

ரமலானுடைய காலப்பகுதியில் மஸ்ஜித்களில் அதிக மக்கள் வருவார்கள் இறைவணக்கங்கள் வழமையான நாட்களை விட அதிகமாகவும் விசேடமாகவும் இருக்கும்.

அதே போல சிறுவர்களும் வழமையான நாட்களை விட அதிகமாக மஸ்ஜித்களை நோக்கிப் படை எடுப்பார்கள். இச்சிறுவர்களில் சிலர் தொழுவார்கள் பலர் விளையாடுவார்கள். சத்தம் போடுவார்கள். இவர்களின் இச்செயற்பாடுகள் தொழுகைக்கு இடையூறு விளைவிக்கும் என்ற காரணத்தால் சில பெரியவர்கள் இச்சிறுவர்களை விரட்டுவார்கள். சில நேரங்களில் அடித்து, அறைந்து விரட்டுவார்கள். இச்செயற்பாடு மிக மிகத் தவறானது.

நமது எதிர்கால சமூகத்தை மஸ்ஜித்களில் இருந்து தூரமாக்கும் செயற்பாடாகவே இது அமைகிறது. ஒரு சகோதரர் அவருடைய கடந்த காலங்களை நினைவு கூர்ந்து சில சம்பவங்களை என்னோடு பகிர்ந்து கொண்டார். இப்பதிவை எழுதுவதற்கு அவர்களின் சில ஆதங்கங்களும் ஒரு காரணம்.

அவருடைய சிறுபராயத்தில் அவரும் நண்பர்களும் மஸ்ஜித்துக்கு செல்வது அங்கு தொழுவது, விளையாடுவது வழமை. அந்த வகையில் இவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும்போது சில பெரியவர்கள் அறைந்து விரட்டி இருக்கிறார்கள். அந்த நாள் மஸ்ஜிதை விட்டு ஓடிய அந்த சகோதரர் மீண்டும் மஸ்ஜித் வருவதற்கு சுமார் 40 வருடங்கள் சென்றதாம். அவர் சொல்கிறார், ''சிறுவயதில் தொழுகையில் மிகுந்த ஆர்வம் இருந்தது. அன்று விரட்டியடிக்கப்பட்டதால் வேறு இடங்களுக்குச் சென்று விளையாடினோம். மோசமான நட்புகளோடு இணைந்தோம். பாதை தடம் மாறியது. பிற்கால வாழ்கையும் தடுமாறியது. அதனை உணர்ந்து நல்வழி பெற்று மீண்டு வர 40 வருடங்கள் சென்றன'' என்றார்.

இதுதான் அன்று தொடக்கம் இன்றுவரை நமது சமூகம் விடும் மிகப்பெரிய பிழையும் தவறான வழிகாட்டலுமாகும். சரியாக விதைக்காமல் அறுவடைக்கு உகந்தது இல்லை என்பது யாருடைய முட்டாள்தனம்? விதைத்தவனுடையதா? விதையுடையதா?

இன்னும் சில மோசமான முன்மாதிரிகளை எமது மூத்தவர்கள் செய்கிறார்கள். இது தொடர்பில் ஒரு பதிவு எழுதியிருந்தேன். அதனை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துகிறேன்.

சிறுவர்களுக்கு எதிலும் ஆர்வம் அதிகம். தொழுகையின்போது முதல் வரிசையில் நின்று தொழ வேண்டும் என்ற ஆர்வம் அதிகம். ஆனால், அச்சிறுவர்கள் முந்திக்கொண்டு முன் வரிசையில் நிற்கும்போது சில மூத்தவர்கள் அவர்களை நிற்க விடாமல் இழுத்து பின்னே தள்ளிவிடுவார்கள். பெரியவர்கள்தான் முன் வரிசையில் நிற்க வேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடு. இது மிகவும் பிழையான செயற்பாடு. இவ்வாறு பின்னால் விரட்டப்படும்போது இந்த சமூகம் நம்மை முன்னேற விடாது என்ற எண்ணம் அப்போதே அவன் உள்ளத்தில் பதிவாகிறது.

துருக்கி நாட்டில் மஸ்ஜித் உள்ளே சிறுவர்கள் விளையாடுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ரமலான் காலத்தில் தறாவீஹ் தொழுகை முடிந்த பின்னர் மஸ்ஜித் உள்ளே பெரியவர்கள் சிறுவர்களோடு விளையாடுகிறார்கள். இச்செய்திகளை சமூக ஊடகங்கள் வாயிலாக நாம் அவதானிக்கிறோம். இதுவே ஒரு சிறந்த முன்மாதிரி மிக்கதாகவே இருக்கிறது.

மஸ்ஜீத்களில் சிறுவர்களின் வருகை இல்லாது போனால் இறையச்சம் உள்ள ஒழுக்கமுள்ள சமூகத்தை நாம் இழந்து விடப்போகிறோம் என்று நினைத்துக் கொள்ளுங்கள். மஸ்ஜித் என்பது வெறுமென வர்ண மின்குமிழ்களாலும், வர்ணப் பூச்சுகளாலும், கட்டடக் கலைகளாலும் அலங்கரிக்கப்பட வேண்டியவையல்ல. மாறாக நல்ல சமூகத்தை உருவாக்குவதற்கான ஒரு தளமாக அமைய வேண்டும் என்பதே எனது கருத்து.

நமது எதிர்கால சமூகம் ஒழுக்கமுள்ளதாகவும் நேர்வழி பெற்றதாகவும் சமூகப்பொறுப்புள்ளதாகவும் அமைய வேண்டும் என்றால் அவர்களை மஸ்ஜித்தோடு தொடர்பு படுத்த வேண்டும். அதேபோல் சமூக விடயங்களில் இளைஞர்கள், மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து முன்னோக்கி வழிகாட்ட வேண்டும். மூத்தவர்கள் வழிவிட்டு வழிகாட்டக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இன்ஷா அல்லாஹ், நாம் விதைப்பதை சரியாக விதைப்போம். அறுவடை அமோகமாகக் கிடைக்கும்.

*-எம்.பஹத் ஜுனைட்-*

# ஒழுக்காற்று நடவடிக்கையெனக் கூறி மாணவர்களுக்கு விடுகைப்பத்திரம் வழங்கப்படக்கூடாதென அறிவுறுத்து

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம்

பாடசாலை மாணவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதாக அதிபர்கள் எதேச்சையாக பாடசாலை விடுகைப்பத்திரங்களை வழங்குவது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கும் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்துக்குட்பட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்களுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண கல்வித் திணைக்களம், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வலயக்கல்வி அலுவலகங்கள், சட்ட வைத்திய நிபுணர், சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்புத் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மாவட்ட சிறுவர் மேம்பாட்டுப் பிரிவு ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குப்பற்றியிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் பாடசாலைகளில் தவறிழைக்கின்ற மாணவர்களுக்கு தண்டனையின் ஒரு பகுதியாக விடுகைப்பத்திரத்தை வழங்குவதை பாடசாலை அதிபர்கள் தொடர்ச்சியாகப் பின்பற்றி வருவதால் அவ்வாறு விடுகைப்பத்திரத்தை வழங்கி பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படும் மாணவர்கள் சமூகத்தில் பல்வேறு குற்றச்செயல்களைப் புரியும் நபர்களாக இனங்காணப்படுகின்றனர் என்பது தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டது.

மேலும் தவறிழைத்த மாணவர் தொடர்பில் பாடசாலை ஒழுக்காற்றுக் குழுவைக் கூட்டி பாடசாலையிலிருந்து இடைவிலகாத வகையில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமே தவிர, மாணவர்களுக்கு விடுகைப் பத்திரம் வழங்கும் அதிகாரம் கல்வியமைச்சின் 2016/12ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் அதிபர்களுக்கு வழங்கப்படவில்லை.

எனவே, அதிபர்கள் ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பெயரில் மாணவர்களுக்கு விடுகைப்பத்திரத்தை வழங்குவதானது அதிபர்கள் தமக்கு கையளிக்கப்படாத அதிகாரத்தை செயற்படுத்துவதாகும் எனவும் இது அதிகார வரம்புமீறல் எனவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், குறித்த சுற்றுநிருபத்தின்படி ஒரு மாணவன் தொடர்பில் அவ்வொழுக்க மீறலுக்குட்பட்ட மாணவனை அப்பாடசாலையில் தொடர்ந்து வைத்திருப்பதா அல்லது இன்னொரு பாடசாலைக்கு குறித்த மாணவனை இணைப்பதா என்ற தீர்மானத்தை மேற்கொள்வது வலயக் கல்விப் பணிப்பாளருடைய கடமை மற்றும் பொறுப்பு என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, வலயக்கல்விப் பணிப்பாளர் இவ்விடயத்தில் கரிசனையோடு செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. இக்கலந்துரையாடலின் இறுதியில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பாடசாலை மாணவர்களுக்கு ஒழுக்காற்றுக் கட்டளையின் ஒரு பகுதியாக அதிபர்களால் விடுகைப்பத்திரத்தை வழங்குவது மேற்கொள்ளாதிருக்க அதிபர்களுக்கு உரிய அறிவுறுத்தல் வழங்கல்.

2. மாணவர்களை அப்பாடசாலை சூழலில் வைத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றதெனின், அவ்விடயம் வலயக்கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்கு அதிபர்களால் கொண்டுவரப்படுதல் வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் மாணவரது கல்வி உரிமையைப் பறிக்கும் வகையில் மாணவர்களுக்கு அதிபர்களால் விடுகைப்பத்திரம் தன்னிச்சையாக வழங்கப்பட முடியாது எனத் தீர்மானிக்கப்பட்டது.

3. மாணவர்கள் பாடசாலைகளில் தவறிழைக்கும் சந்தர்ப்பத்தில் மாணவர்களுக்கு விடுகைப் பத்திரம் வழங்கும்போது ''பெற்றோரின் சம்மதத்துடன் வழங்கப்பட்டது'' என அதிபர்களால் பெற்றோரிடம் கடிதம் பெற்று வழங்கப்படும் சந்தர்ப்பங்களும் கலந்துரையாடப்பட்டது. எனினும், மாணவரின் / சிறுவர்களின் அதியுச்ச நலனைக் கருத்திற்கொண்டு பெற்றோரின் சம்மதத்தை விட மாணவனின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் அதிபர்கள் செயற்பட வேண்டும் எனவும் இவ்வாறான சூழ்நிலைகளையும் வலயக்கல்விப் பணிப்பாளர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

4. பெற்றோரின் சுயவிருப்பத்தின்பேரில் மாணவர்களது விடுகைப்பத்திரத்தைக் கோரினாலும் கூட, அம்மாணவன் வேறொரு பாடசாலையில் அனுமதியைப் பெற்றுள்ளமையை உறுதிப்படுத்திய பின்னரே அம்மாணவனது விடுகைப்பத்திரம் வழங்குவது தொடர்பில் தீர்மானிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

5. மாதந்தோறும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில் பகுப்பாய்வு செய்யவேண்டும். மாணவர்களுடைய எண்ணிக்கையில் குறைவு காணப்படும்போது அவ்விடயம் தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு ஒரு மாணவன் பாடசாலையை விட்டு விலகியிருக்கும்போது அம்மாணவன் தொடர்பில் ஆராயவும் வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், பாடசாலைக்கு வரவு ஒழுங்கீனமாக உள்ள மாணவர்கள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

6. ஒழுக்கத்திற்கு மாறாக செயற்படுகின்ற மாணவர்கள் தொடர்பில் மட்டுமன்றி, சவாலிற்கு உட்பட்ட சிறுவர்கள், கல்வி குறைவான சிறுவர்கள், துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பிலும் அதிபர்கள் பாடசாலை விடுகைப்பத்திரம் வழங்குவதில் தன்னிச்சையாக செயல்பட முடியாது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# எழுவைதீவின் பனை வளத்தை பாதுகாக்க நடவடிக்கை

### சிறீதரன் எம்.பி உறுதி





எழுவைதீவின் பெருவளமாக உள்ள பனைவளம் அழிக்கப்படுவதை தடுப்பதற்கும், கருவேல மரங்களின் பரவலை கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எழுவைதீவு மக்களிடம் தெரிவித்துள்ளார்.

எழுவைதீவு மக்களும், கடற்றொழிலாளர்களும் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் (28) எழுவைதீவில் நடைபெற்றுள்ளது.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளால் ஒழுங்குசெய்யப்பட்ட இக்கலந்துரையாடலில், அவர்களது அழைப்பின்பேரில் கலந்துகொண்டிருந்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, எழுவைதீவின் பெருவளமாக உள்ள பனைவளம் அழிக்கப்பட்டுவருவது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும், அதிவேகமாக பரவிவரும் கருவேல மரங்களின் பரவலைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், தொடர்ச்சியாக தாம் எதிர்கொள்ளும் குடிநீர், போக்குவரத்து உள்ளிட்ட பிரச்சினைகள் பற்றியும் மீன்களை பதனிடுதலில் உள்ள இடர்பாடுகள் உட்பட மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார நெருக்கடிகள் குறித்தும் அப்பகுதி மக்களும், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளும் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்கு கொண்டுவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான 4ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தை ஆரம்பம்




அடுத்த வருடம் (2024) கைச்சாத்திட உத்தேசிக்கப்பட்டுள்ள இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்த ஒப்பந்தம் குறித்த நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் கடந்த 27 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகின.

பாரிய மற்றும் வளர்ந்துவரும் பொருளாதாரத்தைக்கொண்ட தென்கிழக்காசிய சங்கத்திற்குரித்தான நாடுகளுடன் பொருளாதார உறவுகளைப் பலப்படுத்திக்கொள்வதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும்.

அதற்கமைய, இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரத்திற்காக தாய்லாந்து சந்தைக்குள் நுழைவதற்கான வாய்ப்புகளை அதிகரித்துகொள்வது மாத்திரமன்றி, அந்த பொருளாதாரச் சந்தையினூடாக ஏனைய ஆசியான் நாடுகளின் பொருளாதார சந்தைகளுக்கான பிரவேசத்தை அதிகரித்துக்கொள்வதுடன், தற்போது காணப்படும் சுங்க வரி அல்லாத தடைகளைக் குறைத்துகொள்வதே இலங்கை தரப்பு பேச்சுவார்த்தையின் நோக்கமாகும்.

மேற்படி 4ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்காக தாய்லாந்து வர்த்தகக் கலந்துரையாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவுரமன் சுப்தாவீதும் (Auramon Supathaweethum) தலைமையில் 35 அதிகாரிகள் உள்ளடங்கலான தாய்லாந்து தூதுக் குழு மார்ச் 26ஆம் திகதி இந்நாட்டை வந்தடைந்தது.

அதேபோல், இருநாடுகளுக்கும் இடையில் காணப்படுகின்ற நீண்ட கால சமய மற்றும் கலாசார தொடர்புகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ளும் வகையில் தாய்லாந்து குழுவினரால் கங்காராம விகாரைக்கு 500 அன்னதானப் பாத்திரங்கள் நன்கொடையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி செயலகத்தின் பிரதம மத்தியஸ்தர் கே.ஜே.வீரசிங்க தலைமையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, பொருளாதார, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு, தொழில் அமைச்சு, பொருளாதார மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களம், சட்ட மா அதிபர் திணைக்களம், வணிகத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி மற்றும் முதலீட்டுச் சபை உள்ளிட்ட நிறுவன அதிகாரிகளைக்கொண்ட தேசிய வர்த்தகப் பேச்சுவார்த்தைகளுக்கான குழுவினர் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டிருந்தனர்.

# எரிபொருள் விலை குறைப்பு மக்களுக்கு பல்வேறு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கும்

## தொழிற்சங்கங்கள் சுயநலத்தை விட்டுவிட்டு மக்கள் குறித்து சிந்திக்க வேண்டுமென ஆனந்தகுமார் வேண்டுகோள்



எரிபொருள் விலை குறைப்பானது மக்களுக்கு பல்வேறு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கும். இத்தருணத்தில் தொழிற்சங்கங்கள் தங்கள் சுயநலத்தை கைவிட்டுவிட்டு மக்களின் நலனை கருத்திற்கொண்டு செயல்பட வேண்டுமென ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினரான எஸ்.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

எமது நாடு கடந்த ஒருவருடத்திற்கு முன்னர் இருந்த நிலைமையை அனைவரும் அறிவார்கள். எங்கு பார்த்தாலும் மக்கள் வரிசையில் நின்றே பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. எரிபொருளை பெற்றுக்கொள்ள நாட்கணக்கில் மக்கள் வரிசையில் இருந்த யுகத்தை மாற்றி இன்று எரிபொருள் விலையைக் குறைத்து மக்களுக்கு சலுகைகளை வழங்கும் யுகத்துக்குள் நாட்டை ஜனாதிபதி கொண்டுவந்துள்ளார்.

எரிபொருள் விலை குறைந்தால் போக்குவரத்து செலவுகள் குறையும். அதனால் பொருட்களின் விலைகளும் குறையும். அதேபோன்று சர்வதேச நாயண நிதியம் இலங்கைக்கு வழங்கியுள்ள கடன் வசதிகள் ஊடாக நாடு வழமைக்குத் திரும்பும் நிலை உருவாகியுள்ளது. மக்கள் எதிர்கொண்ட பல்வேறு துன்பங்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் காலம் மெல்ல மெல்ல உருவாகிவரும் சூழலில் தொழிற்சங்கங்களும் இதற்கு ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.

எதிர்க்கட்சிகளின் நிகழ்ச்சி நிரலில் சிக்கியுள்ள தொழிற்சங்கங்கள் அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்துத் திட்டங்களையும் எதிர்ப்பது சுயநலமானது. மக்களின் வாழ்க்கைச் செலவு குறையவேண்டுமெனில் தொழிற்சங்கங்களும் தமது ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். அதனைவிடுத்து மக்களின் துயரத்தில் அரசியல் செய்ய வேண்டாம். தேவையற்ற போராட்டங்களை செய்து மீண்டும் நாட்டை பழைய நிலைக்கு கொண்டுசெல்ல வேண்டாம் எனவும் எஸ்.ஆனந்தகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

தளபாடத் தொழிலில் திறமையாக ஈடுபடக் கூடியவர்கள் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு. உடனடியாக தொடர்புகொள்ளவும்.
0713 255 329

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (29.03.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 211.2584 | 225.2694 |
| கனேடியன் டொலர் | 231.4640 | 246.9276 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 45.2516 | 49.0355 |
| யூரோ | 343.0579 | 363.1341 |
| ஜப்பான் யென் | 2.4024 | 2.5440 |
| சிங்கப்பூர் டொலர் | 237.9493 | 252.3029 |
| ஸ்ரேலிங் பவுன் | 389.9168 | 412.2494 |
| சுவிஸ் பிராங்க் | 341.9937 | 365.4730 |
| ஐ.அ. டொலர் | 315.7075 | 333.4925 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 855.8117 |
| குவைட் | குவைட் தினார் | 1,053.2272 |
| ஓமான் | ஓமான் றியால் | 838.0518 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.9357 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.9207 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.8507 |

# இ.போ.ச. மஹரகம டிப்போவில் 64 ஆயிரம் லீற்றர் பெற்றோல் மாயம்

## ரூ.2 கோடியே 70 இலட்சம் நட்டம்

இலங்கை போக்குவரத்து சபையின் மஹரகம டிப்போவில் கடந்த வருடத்தில் 64,000 லீற்றர் பெற்றோல் காணாமல் போயுள்ளமை வருட இறுதி கணக்கீட்டு அறிக்கையின்படி தெரியவந்துள்ளது.

கடந்த வருடத்தின் ஜனவரி முதல் வருட இறுதிவரையான காலப்பகுதியில் இந்த எரிபொருள் லீற்றர் கையிருப்பு காணாமல் போயுள்ளதாகவும் இதனால் இலங்கை போக்குவரத்து சபைக்கு இரண்டு கோடியே 70 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

வருட இறுதிக் கணக்கீட்டின் போது இது தெரியவந்துள்ளதுடன், இது தொடர்பில் மேலும் ஆராய் வதற்காக, இலங்கை போக்குவரத்து சபையின் நிதி நிர்வாக பிரதி பொது முகாமையாளர் மங்கள ஜயதிலக்க, கணக்காளர்கள் அடங்கிய 17 பேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.03.28
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5073
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,181,716.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 8 4 0 9 1 2

கொவிசெத தேகி வாசி
சீட்டிழுப்பு இலக்கம் 3315
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள் Q 14 31 35 38
தங்கக்காசு வெற்றியிலக்கங்கள் 0389711 1468119
LED TV வெற்றியிலக்கங்கள் 1054816 0714056 0870499
LAPTOP வெற்றியிலக்கங்கள் 0541703 1174098 0314260 1072952 1170032
இலட்சாதிபதி வெற்றியிலக்கம் 37801
வெற்றி பெற்றுள்ள முழுத்தொகை ரூ. 32,049,260.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 91,735,236.24

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1528
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,420,596.40
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 0 4 6 4 9 0

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1103
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,510,060.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 19 41 74 82

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 382
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,625,787.20
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 07 09 15 49
விசேட இலக்கினம் கன்னி

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1421
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 311,058,362.00
ஆங்கில எழுத்து Q
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கங்கள் 07 24 37 51
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# மியன்மாரில் சூகியின் கட்சி உட்பட 40 அரசியல் கட்சிகள் கலைப்பு



தேர்தலுக்கு முன்னதாக மியன்மார் ஆட்சிக்குழு, ஆங் சாங் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சியை கலைத்துவிட்டது.

சுமார் இரண்டு ஆண்டுகால ஆட்சிக்கவிழ்ப்புக்குப் பின்னர், இராணுவ ஆட்சியால் நியமிக்கப்பட்ட மியன்மார் தேர்தல் ஆணையம், பதவி நீக்கப்பட்ட தலைவர் ஆங் சான் சூகியின் கட்சி கலைக்கப்படுவதாக அறிவித்தது.

சூகியின் கட்சி உட்பட மொத்தம் 40 அரசியல் கட்சிகள் கலைக்கப்பட்டன. இதன்மூலம் தேர்தலில் வெற்றியை இராணுவ ஆதரவு யூனியன் சொலிடாரிட்டி என்ட் டெவலப்மென்ட் கட்சி கைப்பற்றும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

## என்ன அழகு... எத்தனை அழகு....



கேரளாவின் கொல்லம் அருகே பெண்கள் வேடமிட்ட ஆண்கள் பங்கேற்ற விநோத திருவிழா விமரிசையாக நடைபெற்றது. கொல்லம் மாவட்டத்திலுள்ள கொட்டம்குளக்கரா தேவி கோயிலில் ஆண்டுதோறும் மலையாள மீனம் மாதத்தில் சமய விளக்கு திருவிழா நடைபெறுவது வழக்கம். இதில் கேரளாவில் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்களைப்போன்று வேடமிட்டு பங்கேற்பர். மகளிர் வேடமிட்டு தங்கள் வேண்டுதலை நிறைவேற்றுவதன் மூலம் செல்வம் பெருகும் என்பது அவர்களின் நம்பிக்கை.

இந்நிலையில், திருவிழாவில் சிறந்த ஒப்பனைக்காக முதல் பரிசு வென்ற பெண் வேடமிட்ட ஆணின் புகைப்படம் இணையத்தில் வைரலாகியுள்ளது.

# இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டம்



இஸ்ரேலில் நீதித்துறையின் அதிகாரத்தைக் குறைக்கும் வகையில் அந்நாட்டு பிரதமர் நெதன்யாகுவால் கொண்டுவரவுள்ள சட்டத்திற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. இஸ்ரேலில் புதிய சட்டம் அமுலாகும் பட்சத்தில் நீதித்துறையின் அதிகாரம் குறையும். நீதித்துறையின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி அரசுக்கும், நீதித்துறைக்கு சம அதிகாரம் என்ற நிலை வரும். மேலும் நீதிமன்றத்தின் உத்தரவுகளை மீறவும் இஸ்ரேல் அரசுக்கு அதிகாரம் வழங்கப்படும். அதேபோல் நீதிபதிகள் நியமனத்திலும் அரசுக்கு அதிகாரம் வழங்கப்படும். இது நீதித்துறையை முடக்கும் செயல் எனக் கூறி இஸ்ரேலில் கடுமையான எதிர்ப்புக் குரல்கள் எழுந்துள்ளன. ஊழல் குற்றச்சாட்டுகள் மீது நடவடிக்கை எடுக்காமல் தப்பித்துக்கொள்ளவே பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு புதிய சட்டம் கொண்டுவருவதாகக் கூறி இலட்சக்கணக்கான பொதுமக்கள் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# அகதிகளாக தமிழகத்தில் தஞ்சமடைந்த இலங்கையர்கள்



இலங்கையிலிருந்து அகதிகளாக தனுஷ்கோடிக்குச் சென்ற இலங்கை தமிழர்கள் 8 பேர், மெரைன் பொலிஸாரின் விசாரணைக்குப் பின்னர் மண்டபம் முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் கடந்த ஆண்டு மார்ச்முதல் இதுவரை இலங்கைத் தமிழர்கள் 225 பேர் அகதிகளாக தனுஷ்கோடிக்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், கிளிநொச்சி மாவட்டம் தருமபுரத்தைச் சேர்ந்த சசிக்குமார் (வயது 47), அவரது மனைவி உமாதேவி (வயது 42) அவரது இரு மகள்கள், பார்வதி (வயது 70), மகேந்திரா (வயது 50) ஆகியோர் உட்பட 2 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் திங்களன்று இரவு தலைமன்னாரிலிருந்து பைபர் படகு மூலம் புறப்பட்டு தனுஷ்கோடி அருகேயுள்ள மணல் தீடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை வந்திறங்கினர்.

தகவலறிந்த மெரைன் பொலிஸார் மணல் தீடையிலிருந்த இலங்கைத் தமிழர்கள் 8 பேரை ஹோவர் கிராஃப்ட் படகு மூலம் தனுஷ்கோடி அரிச்சல்முனை கரைக்குக் கொண்டுவந்தனர்.

பின்னர் மெரைன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைக்குப் பின்னர் 8 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

### கடும் பொருளாதார நெருக்கடிக்குள் பாகிஸ்தான்

# உயிர்காக்கும் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு



பாகிஸ்தான் கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்துவரும் நிலையில், தற்போது அங்கு உயிர்காக்கும் மருந்துகளுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடன் அதிகரிப்பாலும், அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்ததாலும், பாகிஸ்தானில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு உயிர்காக்கும் மருந்துகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தானில் கடந்தாண்டு ஜூன் மாதம் ஏற்பட்ட பெரு வெள்ளம், நாட்டில் 3இல் ஒரு பகுதியை மூழ்கடித்தது.

இதனால் சுமார் 3 கோடியே 30 இலட்சம் பேர் வேறு இடத்துக்கு இடம்பெயர்ந்தனர். இதனால் பாகிஸ்தான் பொருளாதாரத்தில் 12.5 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டது. டொலருக்கு எதிரான பாகிஸ்தான் கரன்சியின் மதிப்பு வெகுவாக குறைந்ததாலும், பாகிஸ்தானின் மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் விற்பனை கொள்கையாலும் மருந்துப் பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்தன. இதனால் இறக்குமதியாளர்களால் உயிர்காக்கும் மருந்துகளைக் கொள்முதல் செய்யமுடியவில்லை.

பொது மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் இறக்குமதி தடுப்பூசிகள், புற்றுநோய்க்கான மருந்துகள், மயக்க மருந்துகளுக்கு கடும் பற்றாக்குறை நிலவுகிறது.

பாகிஸ்தானில் சில மருந்துகள், மாத்திரைகள் உற்பத்தி செய்யப்பட்டாலும், தடுப்பூசிகள், புற்றுநோய் தடுப்பு மருந்துகள் போன்றவை இந்தியா, சீனா, ரஷ்யா, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, துருக்கி ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

மருந்து விலைக் கொள்கை 2018 திட்டத்தின்கீழ், பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால் இறக்குமதி மருந்துகளை விநியோகிக்க முடியவில்லை.

கட்டுப்பாடுகளை மறுபரிசீலனை செய்யும்படி பாகிஸ்தான் மருந்து ஒழுங்குமுறை ஆணைய அதிகாரிகளை, மருந்து இறக்குமதியாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

# அ.தி.மு.க. பொதுச் செயலாளராக இ.பி.எஸ். பொறுப்பேற்பு

### ஓ.பி.எஸ். தரப்பில் மேன்முறையீடு - விசாரணைகள் இன்று





அ.தி.மு.க. பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

பொதுச் செயலாளர் தேர்தல் முடிவை வெளியிட விதிக்கப்பட்ட தடையை உயர்நீதிமன்றம் நீக்கியதையடுத்து, அ.தி.மு.க. பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி பொறுப்பேற்றுள்ளார். இதற்கிடையே, ஓபிஎஸ் தரப்பில், உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மனு இன்று (மார்ச் 30) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில், பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி பதவியேற்றதை தமிழகம் முழுவதும் அ.தி.மு.கவினர் பட்டாசு கொளுத்தியும், இனிப்பு வழங்கியும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

தொடர்ந்து பொதுச் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டமைக்கான வெற்றிச் சான்றிதழ் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பழனிசாமி பொதுச் செயலாளராக பெற்றுக் கொண்டார். அப்போது, அ.தி.மு.க. நிறுவனர் எம்.ஜி.ஆர். அணிந்திருப்பது போன்ற தொப்பியையும், கண்ணாடியையும் தொண்டர்கள், எடப்பாடி பழனிசாமிக்கு அணிவித்தனர். அதனையும் எடப்பாடி பழனிசாமியும் மிகுந்த மகிழ்ச்சியுடன் அணிந்துகொண்டார்.

முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் அ.தி.மு.கவில் பல அதிரடி நிகழ்வுகள் அரங்கேறின. கட்சியை நிர்வகிக்க ஒருங்கிணைப்பாளராக ஓ.பன்னீர்செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளராக எடப்பாடி பழனிசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாளடைவில் இந்த இரட்டை தலைமை மீது அதிருப்தி ஏற்பட்டதால் ஒற்றை தலைமை வேண்டும் என்ற கோரிக்கை கட்சியில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது.

இதற்கு ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் கட்சிக்குள் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. இதற்கிடையே அ.தி.மு.க., பொதுக்குழு கூட்டம் சென்னை வானகரத்தில் கடந்த ஆண்டு ஜூலை 11ஆம் திகதி நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தெரிவு செய்யப்பட்டார். இதேபோல் திண்டுக்கல் சீனிவாசன், கே.பி.முனுசாமி உள்ளிட்ட மேலும் பலர் புதிய நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டதோடு, முன்னாள் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அவரது ஆதரவாளர்கள் மனோஜ்பாண்டியன் உள்ளிட்டோர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர்.

பொதுக்குழு தீர்மானங்களை எதிர்த்து ஓபிஎஸ் மற்றும் ஆதரவாளர்கள் தாக்கல் செய்த வழக்குகளை விசாரித்த உயர்நீதிமன்ற தனி நீதிபதி கே.குமரேஷ் பாபு, பொதுச் செயலாளர் தேர்தல் முடிவை வெளியிடக்கூடாதென தடை விதித்திருந்தார்.

இந்த வழக்குகள் மீது உயர்நீதிமன்ற தனி நீதிபதி கே.குமரேஷ் பாபு நேற்றுமுன்தினம் (28) தீர்ப்பளித்தார். அப்போது அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் ஓ.பி.எஸ். உள்ளிட்டோரை நீக்கியும், கட்சிக்கு புதிய நிர்வாகிகளை நியமித்தும் வெளியிடப்பட்ட தீர்மானங்களுக்கு தடை விதிக்க முடியாதென அறிவித்தார். இதேபோல் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் தேர்தல் முடிவை வெளியிட விதிக்கப்பட்ட இடைக்கால தடையை நீக்கியும் நீதிபதி உத்தரவிட்டார்.



ஓ. பன்னீர்செல்வம் உள்ளிட்டோரை கட்சியிலிருந்து நீக்கம் செய்த சிறப்பு தீர்மானத்தை பொறுத்தவரை, அதை பிரதான சிவில் வழக்கில்தான் தீர்மானிக்க முடியும் என்றும், தற்போதைய நிலையில் ஏழு நாட்களுக்கு முன் விளக்கம் கோரி நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்ற விதி மீறப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள நீதிபதி, இருப்பினும், சிறப்பு தீர்மானத்துக்கு இடைக்கால தடை விதித்தால் அது கோடியே 55 இலட்சம் தொண்டர்களைக்கொண்ட கட்சிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தும் என்பதால் கட்சியிலிருந்து மனுதரார்களை நீக்கிய தீர்மானத்திற்கு தடை விதிக்க முடியாது என தனது 85 பக்க தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, தனி நீதிபதி பிறப்பித்த தீர்ப்பை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் மற்றும் மனோஜ் பாண்டியன் தரப்பில் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதில், தனி நீதிபதியின் உத்தரவு முன்னுக்குப்பின் முரணாக உள்ளதால் தடை விதிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேபோல், அ.தி.மு.க. பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி செயற்பட தடை விதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேன்முறையீட்டு மனுக்கள், நீதிபதிகள் மகாதேவன், முகமது ஷஃபிக் ஆகியோரைக்கொண்ட 2 நீதிபதிகள் அமர்வில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



**இ.பி.எஸ். அ.தி.மு.க. பொதுச் செயலாளராக பொறுப்பேற்றுக்கொண்டதையடுத்து 150 கிலோவில் பிரமாண்ட லட்டு தயாரித்து வழங்கிய தொண்டர்கள்...**

## உலக செய்திகள்

# வடகொரியாவின் புதிய அணுகுண்டு



வடகொரியா உருவாக்கியுள்ள புதிய வகை அணுகுண்டுகளை அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜோங் உன் பார்வையிட்டுள்ளார்.

தென்கொரியா- அமெரிக்கா நாடுகள் கூட்டு போர்ப் பயிற்சியில் ஈடுபடுவதற்கு வடகொரியா ஆரம்பம்முதல் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

தனது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில், கடந்த வாரம் நீருக்கடியில் அணுகுண்டை வெடித்து வடகொரியா பரிசோதனை நடத்தியது.

இதையடுத்து திங்கட்கிழமை 2 பொலிஸ்டிக் ரக ஏவுகணைகளை பரிசோதனை நடத்தியது.

இந்நிலையில் 'ஹ்வாசன் 31' என பெயரிடப்பட்டுள்ள புதிய அணுகுண்டுகளை ஜனாதிபதி கிம் பார்வையிட்டுள்ளார்.

# போதைப்பொருளாக நுகரப்படும் 'சிரிப்பூட்டும் வாயு'



சிரிப்பூட்டும் வாயு என்றழைக்கப்படும் 'நைட்ரஸ் ஒட்சைட்' வாயுவானது தடை செய்யப்பட்ட போதைப்பொருளாக பிரித்தானிய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறமற்ற வாயுவான 'நைட்ரஸ் ஒட்சைட்', மருத்துவத் துறையில் அறுவை சிகிச்சையின்போது மயக்க மருந்தாக பயன்படுத்தப்படுகிறது.

பிரித்தானியாவில் சிறு சிறு குப்பிகளில் அடைத்து விற்கப்படும் இந்த வாயுவை வாங்கும் இளைஞர்கள், அதனை பலூனில் நிரப்பி சிறுக சிறுக முகர்ந்து போதைக்காகவும், பரவச மனநிலைக்காகவும் பயன்படுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

'நைட்ரஸ் ஒட்சைட்' அதிகளவு எடுத்துக் கொண்டாலோ, தொடர்ச்சியாக எடுத்துக் கொண்டாலோ தலைவலி, தலைச்சுற்றல், சித்தப்பிரமை, ஒலி சிதைவு உள்ளிட்ட பிரச்சினைகளைக் கொண்டுவருவதுடன், வலிப்பு ஏற்படவும் வாய்ப்புண்டு என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

## நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்தில் முகாமுக்கு தீ வைத்த புலம்பெயர்ந்தோர்

அமெரிக்கா- மெக்சிக்கோ எல்லையில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த முகாமில் ஏற்பட்ட தீ விபத்தில் 39 பேர் உயிரிழந்த நிலையில், தாங்கள் நாடு கடத்தப்படலாம் என்ற அச்சத்தில் புலம்பெயர்ந்தவர்களே தங்களின் மெத்தைகளை எரித்ததால் இந்த தீ விபத்து நேரிட்டுள்ளது என மெக்சிக்கோ ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# கைவிடப்பட்ட கால்நடைகளை பராமரிக்க இடங்கள் தெரிவு

## விரும்பியோர் விண்ணப்பிக்கலாமென வட மாகாண ஆளுநர் தெரிவிப்பு



வட மாகாணத்தில் உரிமையாளர்களால் கைவிடப்பட்ட கால்நடைகளைப் பராமரிப்பதற்கான காணிகள் அடையாளப்படுத்தப் பட்டுள்ள நிலையில், கால்நடைகளைப் பராமரிக்க விரும்புவோர் ஆளுநர் செயலகத்துடன் தொடர்புகொள்ள முடியும் - என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உரிமையாளர்களால் கைவிடப்பட்ட கால்நடைகளைப் பராமரிப்பதற்கேற்ற இடங்களைத் தெரிவுசெய்யுமாறு கேட்டதற்கிணங்க 22 பிரதேச செயலகங்களில் அதற்கான இடங்களைத் தெரிவுசெய்து அனுப்பியுள்ளார்கள்.

யுத்த நிலைமை முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட காலம்முதல் இன்றுவரை கால்நடைகள், குறிப்பாக மாடுகள். பெருமளவில் உரிமையாளர்களால் கைவிடப்பட்டு கட்டாக்காலிகளாக பொது இடங்களில் அலைந்து திரிவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இவ்வாறான கால்நடைகள் வீதிகளில் விபத்துக்குள்ளாகி இறப்பதும் நோய்வாய்ப்பட்டுச் சிகிச்சைகளின்றி மரணிப்பது மட்டுமன்றி, விவசாய மற்றும் பயிர்ச்செய்கை நிலங்களில் பயிர்களை நாசமாக்கி விவசாயிகளுக்குப் பொருளாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

சில சந்தர்ப்பங்களில் இவ்வாறான கால்நடைகள் திருடப்பட்டு வயது, பால் வித்தியாசமின்றி இறைச்சிக்காக வெட்டப்படும் சம்பவங்களும் இடம்பெற்றுவருவது மிகவும் கவலைக்குரியது.

மனிதாபிமானச் சிந்தனையில் கைவிடப்பட்ட கால்நடைகள் உள்ளிட்ட சகல பிராணிகளுக்குமான நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அவற்றுக்கு உரிய முறையில் உணவளிக்கவும் நோய் மற்றும் பிற இயற்கை அனர்த்தம் உள்ளிட்ட காரணிகளால் இவ்விலங்குகள் பாதிப்படைவதைத் தடுப்பதற்கான செயன்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

இக்கருத்துக்கமைய கால்நடைகளுக்கான பாதுகாப்பான காப்பகங்களைத் தேவைக்கேற்ப வடமாகாணம் எங்கும் அமைத்துப் பராமரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்படி கால்நடைகளுக்கான பாதுகாப்புக் காப்பகங்களை விரும்பிய பகுதிகளில் அமைத்துப் பராமரிக்க விரும்பும் சமய ஸ்தாபனங்கள், தொண்டு நிறுவனங்கள். அரச சார்புற்ற நிறுவனங்கள் மற்றும் மிருக வதைக்கு எதிரான இயக்கங்கள் வடமாகாண ஆளுநர் செயலத்துடன் தொடர்புகொண்டு தமது விருப்பத்தைக் கடிதம் மூலம் தெரிவிக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# 230 கிலோ உலர் கடலட்டைகளுடன் மன்னார் பள்ளிமுனையில் ஒருவர் கைது







மன்னார், பள்ளிமுனை பகுதியில் மேற் கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில், சட்டவிரோதமாக உலர்த்தப்பட்ட 230 கிலோ கடலட்டைகளை கடத்திய நபர் ஒருவரை இலங்கை கடற்படையினர் கைதுசெய்தனர்.

வடமத்திய கடற்படையினர் நேற்று முன்தினம் (28) பள்ளிமுனை பகுதியில் இந்தத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதுடன், சட்டவிரோதமாக உலர்ந்த கடல் அட்டைகளைக் கடத்திய நபரை கைதுசெய்தனர்.

சந்தேக நபரிடமிருந்து சுமார் 230 கிலோகிராம் உலர் கடல் அட்டைகள், டைவிங் உபகரணங்கள் மற்றும் டிங்கி படகு ஆகியவற்றை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மன்னார் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடையவரா வார். கைதானவர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் மீன்பிடி பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# பொருளாதார நெருக்கடிகளிலிருந்து ஓரிரு வருடங்களில் நாடு மீண்டெழும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை



ஓரிரு வருடங்களில் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாடு மீண்டெழும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாட்டை மீட்டெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் வெற்றியடைந்து வருவதாகவும் தெரிவித்தார்.

சகலருக்கும் சமமான கல்வி எனும் சிந்தனைக்கு அமைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு முழுவதிலும் மேற்கொண்டு வரும் மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள், சீருடைகள் வழங்கும் தேசிய நிகழ்வு நேற்று (29) முழங்காவில் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாணவர்களுக்கான சீருடைகளையும் பாடநூல்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் உரையாற்றியபோது கருத்து தெரிவித்த அமைச்சர், இந்த தேசிய நிகழ்வில் கலந்துகொள்வதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், இதற்கு காரணமாக இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

மேலும், "இப்பாடசாலையின் முன்னேற்றங்கள், நிலவும் குறைபாடுகள், தேவைகள் தொடர்பாக அதிபர் மற்றும் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் முன்வைத்திருக்கிறார்கள். இந்தக் குறைகளை ஏற்று அவற்றை நிவர்த்திசெய்ய ஆவண செய்வதுடன், நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள், கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் டிப்ளோமாதாரிகள் மூலம் நிரப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் ஆம்பத்தில் மாணவிகள் தமிழில் தேசிய கீதம் பாடினார்கள். நாட்டின் சுதந்திர தினத்தன்று தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திடமான தீர்மானங்களின் பயனாக சுதந்திர தினம் போன்ற தேசிய நிகழ்வுகளில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்படுகிறது.

தேசிய கீதத்தில் சொல்லப்பட்டுள்ள தேசிய ரீதியான சிந்தனைகளை உள்வாங்கி மனப்பாடம் செய்து பாடுவதன் மூலம் மாணவர்கள் தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

# நிர்மாணத்துறையிலுள்ள பிரச்சினைகளை விரைவில் தீர்ப்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு



நாட்டின் நிதி நிலைமை சீரானதுடன், நிர்மாணத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குப் படிப்படியாக தீர்வுகள் வழங்கப்படுமென தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நிர்மாணத்துறையை மேம்படுத்துவதற்கான வட்டி வீதங்கள் மற்றும் வங்கி மீட்பு நடவடிக்கைகள் தொடர்பான செயற்குழு நேற்று முன்தினம் (28) ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் நிர்மாணத் துறையினர் எதிர்நோக்கும் நிதிச் சிக்கல்கள் மற்றும் இது தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது. இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய சாகல ரத்நாயக்க, நிர்மாணத்துறையில் ஏற்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வழங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்று தெரிவித்தார். நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் நிதித்துறையின் தற்போதைய நிலைமை குறித்து விளக்கமளித்தனர்.

இக்கலந்துரையாடலில் பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க உட்பட குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# டயலொக் ஆசிஆட்டா நிறுவனம் ஈ - ஸ்வபிமானி விருதுகள் 2021 விழாவில் உயர்மட்ட கௌரவிப்பை பெற்றுள்ளது

இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குநரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி அண்மையில் நடைபெற்ற ஈ- ஸ்வபிமானி 2021(e-Swabhimani)விருது வழங்கும் விழாவில் மிக உயர்ந்த அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. பல்வேறு சமூகங்களுக்காக டயலொக் மேற்கொண்ட டிஜிட்டல் மயமாக்கல் வேலைத்திட்டம் மற்றும் அதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட சயுரு, தோழி, சரு போன்ற சேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மற்றும் அதனூடாக இந்நாட்டின் பல்வேறு சமூகங்களுக்கான வலுவூட்டல் உட்பட நாட்டின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை பேணல் ஆகிய பங்களிப்புக்காக டயலொக் நிறுவனம் இந்த தனித்துவமான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனமானது (ICTA), சமூகத்தில் தனித்துவமான தாக்கத்தை ஏற்படுத்திய பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறந்த டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களை அங்கீகரிப்பதற்காக ஏற்பாடு செய்து கௌரவிக்கும் நிகழ்வே ஈ -ஸ்வபிமானி 2021 விருது வழங்கும் விழாவாகும்.

தினமும் கடலில் பயணிக்கும் மீனவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக மும்மொழிகளிலும் இலவசமாக வழங்கப்படுகின்ற சயுரு எனும் வானிலை மற்றும் எச்சரிக்கை எஸ்எம்எஸ் சேவைக்காக உள்ளடக்கம் மற்றும் வலுவூட்டல் பிரிவிலேயே டயலொக் விருதினை வென்றுள்ளது. அதுமட்டுமன்றி, மருத்துவ சேவைகள், மனநலம், நல்வாழ்வு மற்றும் சட்டச் சிக்கல்கள் ஆகியனவற்றை மும்மொழிகளிலும் ஒருவர் தனிப்பட்ட ரீதியில் சமர்ப்பித்து ஆலோசனைகளைப் பெறக்கூடிய வசதிகளைக்கொண்ட டயலொக்கின் தோழி சேவை, உடல்நலம் மற்றும் நல்வாழ்வு பிரிவில் இணை வெற்றியாளராகவும் தெரிவாகியுள்ளது. மேலும், விவசாயிகளின் பயிர்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சரு எனும் தானியங்கி வேளாண்மை தீர்வும் சுற்றுச்சூழல் மற்றும் பசுமை ஆற்றல் பிரிவில் இணை வெற்றியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ இது குறித்து தெரிவிக்கையில், "எமது டிஜிட்டல் கண்டுபிடிப்பு மற்றும் சமூக முதலீட்டு சேவைகளுக்காக ஈ - ஸ்வபிமானி விருதுகளில் 3 பிரிவுகளில் விருதுகளை நாம் வெல்வது எமக்குக் கிடைத்த பெரும் கௌரவமாகும். தொழில்நுட்பத்தின் மூலம் சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதில் நமது நிறுவனம் எப்போதும் உறுதியுடன் உள்ளது. நாங்கள் பெற்ற இந்த ஈ-ஸ்வபிமானி விருதுகள் டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கான எங்கள் முயற்சிகளுக்கான சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது" - என்றார்.

டயலொக் ஆசிஆட்டா நிறுவனமானது சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் சமூக சேவை முதலீட்டுத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடும். மேலும், டயலொக் சமூக நலனுக்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளமைக்கு சிறந்த உதாரணங்களாக சயுரு, தோழி மற்றும் சரு ஆகிய சமூக சேவை வேலைத்திட்டங்களை குறிப்பிடலாம். டயலொக் நிறுவனத்தின் நிலைத்தன்மை முயற்சிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்களைப் பற்றி மேலும் அறிய https://dlg.dialog.lk/sustainability க்கு செல்லுங்கள்

Dialog



**படத்தில் இடமிருந்து வலமாக:** டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் சமூக புத்தாக்கப் பிரிவு விசேட நிபுணர் நுவன் ஜயசிங்க, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் டிஜிட்டல் உள்ளடக்கப் பிரிவு மூத்த நிர்வாகி ஹாதில் நஸ்லி, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் சமூக புத்தாக்கப் பிரிவு விசேட நிபுணர் இஷானி கமகே, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் இடர் மற்றும் இணக்கத்தின் குழுமத் தலைவர் அசங்க பிரியதர்சன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் சமூக புத்தாக்கப் பிரிவு உதவி முகாமையாளர் ஐங்கரராஜ் ஜெயராஜசிங்கம், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் புத்தாக்க மற்றும் நிலைபேண்தகு பிரிவு உதவி முகாமையாளர் தருஷ வணிகசேகர மற்றும் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் AgriTech பிரிவு தயாரிப்பு முகாமையாளர் முதித் ஜெயசேகர.

# காலி சிறைச்சாலை கைதி தப்பியோட்டம்

பத்தேகம நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டதன் பின்னர் சிறைச்சாலைக்கு அழைத்துச்செல்லப்பட்ட காலி சிறைச்சாலையின் கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த கைதி நேற்று முன்தினம் (28) நீதிமன்ற அறையின் யன்னல் வழியாக தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

போதைப்பொருள் மற்றும் திருட்டு குற்றச்சாட்டில் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு தப்பிச்சென்றுள்ளார். இவர் மீது போதைப்பொருள் தொடர்பான சுமார் 30 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தப்பியோடிய கைதியை கைதுசெய்ய 5 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# வீதியில் நடந்துசென்றவர் மீது கனரக வாகனம் மோதி விபத்து

## குடும்பஸ்தரொருவர் பலி

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இந்திராபுரம் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் (28) பிற்பகல் 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இந்திராபுரம் பகுதியில் ஏ9 வீதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பளை நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மீது பின்னால் சென்ற கனரக வாகனம் மோதியதில் சம்பவ இடத்திலேயே குறித்த குடும்பஸ்தர் பலியாகியுள்ளார்.

சடலம் பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாக குறித்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ள நிலையில், பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# துண்டித்த மின்சாரத்தை மீள வழங்க மறந்த மின்சார சபை

## சாவகச்சேரி மீசாலை வடக்கில் சம்பவம்

ஆலயம் ஒன்றின் காணிக்குள் மரத்தை வெட்டுவதற்காக துண்டிக்கப்பட்ட மின்சாரத்தை மீள வழங்க மின்சார சபை மறந்துபோனதால் கிராமமே நேற்று முன்தினம் (28) இருளில் மூழ்கியிருந்தது.

சாவகச்சேரி மீசாலை வடக்கிலுள்ள ஆலயமொன்றின் காணிக்குள் மரத்தை வெட்டும்போது மின் கம்பங்கள் மற்றும் வயர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் மின்சாரத்தை துண்டிப்பதற்கான அனுமதி ஆலய நிர்வாகத்தால் பெறப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் சாவகச்சேரி மின்சார சபையால் நேற்று முன்தினம் (28) காலை 9.30 மணியளவில் மீசாலை வடக்கு ஊரெல்லைத் தெருவிற்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

மரம் தறித்து முடிந்த பின்னர் பிற்பகல் 2.30 மணியளவில் மின் இணைப்பை மீள வழங்குமாறு மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டது. இருந்தபோதிலும் மின் இணைப்பு மீள வழங்கப்படவில்லை.

மின்சாரம் வழங்கப்படும் எனக் காத்திருந்து பொறுமையிழந்த கிராம மக்கள் சுன்னாகம் மின் நிலையத்திற்கு பல தடவைகள் அழைப்பெடுத்து முறைப்பாடு செய்தனர்.

இருந்தும் நேற்றிரவு இரவு 7.15 மணியளவிலேயே மின்சாரம் வழங்கப்பட்டது. மின்சார சபையின் அசமந்த போக்கையும், பொறுப்புணர்ச்சியற்ற தன்மையையும் கண்டிப்பதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.



மாத்தளை எல்கடுவை தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும் 2022ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வும் வித்தியாலய அதிபர் மாணிக்கம் தியாகராஜன் தலைமையில் நேற்று முன்தினம் (28) இடம்பெற்றது.

# கிழக்கு இருப்புவாதத்தில் சிங்கள பௌத்த மயமாக்கல் உள்ளதா?



## அதற்கும் தலையாட்டுகிறார்களாவென முன்னாள் எம்.பி. ஸ்ரீநேசன் கேள்வி

(எருவில் செய்தியாளர்)

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பைப் பாதுகாக்கின்ற பாதுகாவலர்களென்று மட்டக்களப்பிலுள்ள இரு இராஜாங்க அமைச்சர்கள் அடிக்கடி மார்தட்டிக் கொள்கிறார்கள். ஆனால், அவர்களது பொதுஜன பெரமுன ஆட்சியில் கிழக்கு மாகாணத்தில் சிங்கள மயமாக்கல் துரிதமாக நடைபெற்று வருகின்றது. இந்த விடயத்தில் இரு இராஜாங்க அமைச்சர்களும் கண்களை மூடிக்கொண்டு, வாய்களைத் திறக்காமல் இருந்துவருகின்றனர். கிழக்கு ஆளுநர் தனது சிங்கள மயமாக்கலுக்கான வியத்மக வேலைத்திட்டத்தைத் தொடர்ந்தும் செய்து வருகின்றார். அதனை உள்ளூர் அரசியல்வாதிகள் அனுமதிக்கின்றனரா? - இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.ஸ்ரீநேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் சிங்களமயமாக்கல் பற்றி அவர் மேலும் கேள்வி எழுப்புகையில், ஏறாவூரிலுள்ள பழம்பெரும் சந்தையினை சிங்களவர்களுக்கான சந்தை என்று ஆளுநர் குறிப்பிடுவதாக அறியமுடிகின்றது. ஆனால், மட்டக்களப்பில் ஒரு வீதத்திலும் குறைவான சிங்களவர்களே உள்ளனர். அந்தப் பழைய சந்தை இதுவரை திறக்கப்படாமல் காடு மண்டிக் கிடக்கிறது. சந்தை இல்லாமல் தமிழர்கள் நடைபாதைக்கு அருகில் தமது வியாபாரத்தை மேற்கொள்கின்றனர்.

ஏறாவூர் சந்தையைத் திறப்பதில் கிழக்கு இருப்பர்கள் என்னும் இனப் போலியர்கள் பாராமுகமாக உள்ளனர். மேலும், ஏறாவூரிலுள்ள பாரம்பரியமான புன்னைக்குடா வீதியை சிங்களப் பெயரிட ஆளுநர் நடவடிக்கை எடுப்பதாக அறிய முடிகின்றது. இவற்றை விட மயிலத்தனை, மாதவனைப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை மேற்கொள்வதற்கு இதே ஆளுநர் செயற்பட்டுள்ளார்.

அதேபோல் வடமுனை நெடியகல்மலை, கெவுளியாமடு, காரமுனை, குசலானமலை, கன்னியா, திருக்கோணேஸ்வரர் ஆலய காணிகள் என்று பல இடங்களில் சிங்கள மயமாக்கல், பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல் வடக்கிலும் தமிழர் கலாசார அழிப்புகள் தொடர்கின்றன. வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத் தடயங்கள் அழிக்கப்பட்டுள்ளன. குருந்தூர் மலையில் நீதிமன்றத் தடை உத்தரவை மீறி, சட்டவிரோதமாக விகாரை அமைக்கப்பட்டுள்ளது. புனிதமான புத்தரின் சிலைகள் மதவெறியர்களின் ஆக்கிரமிப்புக் குறியீடாக மாற்றப்பட்டுள்ளன. புத்தர் சிலை இனமோதலுக்கான அடையாளக் குறியீடாக மாறியுள்ளது. அன்பைப் போதித்த புத்தரின் சிலைகள், அராஜகரின் ஆக்கிரமிப்பு எல்லையின் நடுகற்களாக மாற்றப்பட்டுள்ளன. புத்தர் உயிர்த்து இலங்கை வந்தால், மதவெறியர்களுக்கு அதியுச்ச தண்டனையைக் கொடுக்கவும் தயங்கமாட்டார். அந்தளவுக்கு பௌத்தத்தின் கௌரவம், புனிதம் மறைக்கப்படுகிறது. இவற்றைத் தடுப்பதை விடுத்து பேரினவாத ஆட்சியாளர்களுக்குத் தலையாட்டிப் பிழைப்பதே தமது கடமை என்ற வகையில், மட்டக்களப்பில் இரண்டு இராஜாங்க அமைச்சர்கள் செயலாற்றுகின்றனர். மட்டக்களப்பிலுள்ள மண்வளம், காணிவளம் என்பவற்றை வியாபாரப் பொருட்களாக்கி தனவந்தர்களாவதில் இராஜாங்க அமைச்சர்கள் ஆர்வமாக உள்ளனர்.

அதேவேளை, பேரினவாத அரசாங்கத்தினதும், ஆளுநரினதும் சிங்கள மயமாக்கல் பொறிமுறைக்குத் தலையாட்டுவதே தம் தலையாய கடமை என்று கிழக்கு இருப்புப் பிரகிருதிகள் செயற்படுகின்றனர். கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை ஆட்சியமைத்து மூன்று நாட்களுக்குள் தரம் உயர்த்துவோம் என்ற இராஜாங்க அமைச்சர்கள், அதனைக் கெட்ட கனவாகக் கருதி மறந்துவிட்டனர். மாறாக, சிங்களப் பேரினவாத அரசுக்கு கை உயர்த்துவதைத் தமது அமைச்சு கடமையாக்கியுள்ளனர். பெயரளவில் இராஜாங்க அமைச்சர்களாக இருக்கின்ற இவர்கள் அடுத்து அமைச்சர்களாக ஆவது எப்படி என்ற கனவுகளில் மிதக்கின்றார்கள்.

அவர்கள் சலுகைகள் என்னும் எலும்புத் துண்டுகளைப் பொறுக்கி, பதவிகள் என்னும் பகட்டு ஆசனங்களை அலங்கரிக்கும் பொம்மையர்களாக உள்ளனர். தமிழர்களின் உரிமைகளை விற்றாவது பதவிகளைத் தக்கவைப்பதிலேயே குறியாக உள்ளனர். அடிப்படைவாத சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள், ஆளுநருக்கு இப்படியான தலையாட்டிகள் பொம்மைகள் உள்ளவரை சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எந்தத் தடையும் இருக்காது. எனவே, சிங்கள மயமாக்கலுக்கு எதிராகப் போராட வேண்டிய கடமை முழுமையாக தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைகளிலும், தமிழர்களின் தலைகளிலுந்தான் சுமத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக்கட்சி உட்பட ஏனைய கட்சிகளும் சிவில் அமைப்புகளும் மக்களும் தமிழர்களுக்காகத் தமது பொறுப்புகளை ஆற்றவேண்டியுள்ளது. பேரினவாத ஆட்சியாளர்கள், ஆளுநரின் அடிவருடிப் பொம்மைத் தலையாட்டிகளால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் விளையாது. ஆனால் அந்தப் பொம்மைகள் மட்டும் கோடீஸ்வரர்களாக மாறியுள்ளனர். ஊழலுக்கு எதிராகச் சட்டம் கொணரவுள்ள ஜனாதிபதி தன்னை சுற்றியுள்ள மோசடிச் செல்வந்தர்களை எப்போது இனம் காண்பாரோ தெரியவில்லை. இன வெறியர், மதவெறியர், கொள்ளையர், கொலையர், வெள்ளைவானர், கப்பக்காரர், கறுப்புச்சந்தையர், காமுகர்கள் ஆட்சியாளர்களிலிருந்து களையப்படாத வரை இந்த நாட்டை எவராலும் காப்பாற்ற முடியாது. இன மத வெறியர் ஆட்சியில் கொள்ளையர், கொலையர் கூட்டுப் பங்காளிகளாகி அரசியலை வியாபாரமாக்கியுள்ளார்.

குண்டர்கள் இன, மத அதிகார வெறியர்களின் சட்டவிரோத பாதுகாவலர்களாகவும் ஆகியுள்ளனர். அதனை 'கோட்டா கோ கம' போராட்டத்திலும், பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்திலும் அடையாளம் கண்டோம். கிழக்கு மாகாண ஆளுநர் பல்லினத்தன்மையான இன சமூகங்களை ஆளுகை செய்யும் தகுதியற்றவர். இவர் சிங்கள இனத்திற்கு மாத்திரம் ஆளுராக இருந்துவருகின்றார். கலைக்கப்பட்ட கோட்டாவின் நிழலுருவாக இவர் உள்ளார். இவரது பின்னணியின் பேரினவாதிகள் உள்ளனர். அவருக்கு முட்டுக் கொடுக்க இரு இராஜாங்கர்கள் கிழக்கில் உள்ளனர். தமிழ் எடுபிடிகளும் அடிவருடிகளுமே இன்றைய இனவாத ஆட்சியாளர்களுக்குத் தேவையாகவுள்ளது - என்றார்.

# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு: இருவர் வைத்தியசாலையில்

(வெல்லாவெளி செய்தியாளர்)

பொலன்னறுவை - வெலிக்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செவனப்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், வாகனத்தில் பயணித்த மேலும் இருவர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதன்கிழமை(29) அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் உயிரிழந்தவர் தம்பிலுவில் தம்பட்டை பகுதியைச் சேர்ந்த சமூக சேவையாளரும் அம்பாறை மாவட்ட இணையத்தின் தவிசாளரும், அக்கறைப்பற்று சுவாட் அமைப்பின் தலைவருமான வடிவேல் பரமசிங்கம் என அடையாளங் காணப்பட்டுள்ளார்.

விபத்தில் காயமடைந்த இருவரும் வெலிக்கந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த விபத்தில் வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை வெலிக்கந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அபராதம் விதிப்பு

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாகாம வீதியில் மதுபோதையில் பொது சமாதானத்தை சீர்குலைத்த சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின்படி குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்து அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் புதன்கிழமை(29) ஆஜர்படுத்தியபோது குறித்த நபருக்கு 3ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. தண்டப்பணம் செலுத்திய பின் சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.



# கைவிடப்பட்ட நிலையிலுள்ள வீடுகளை வீடற்றவர்களுக்கு வழங்க ஏற்பாடுகள்

## திருமலையில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கபில நுவன் எம்.பி.

(அப்துல்சலாம் யாசீம், கிண்ணியா, சீனக்குடா செய்தியாளர்கள்)

அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் பலவற்றில் உரிய பயனாளிகள் வசிக்காமல் அவை கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் இவ்வாறான வீடுகளை இனங்கண்டு மாவட்டத்தில் வீடற்றவர்களுக்கு வழங்கும் பொறிமுறையொன்றை தயாரித்து செயற்பட வேண்டும் எனவும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவருமான கபில நுவன் அத்துகோரல தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (28) மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பு வேலைத் திட்டம் மாவட்ட, பிரதேச அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. அரச நெல் கொள்வனவு சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதுவரை 4 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் நெல் மாவட்ட விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு சுமார் 88 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் மேலதிகமாக கொள்வனவு செய்யப்படும் நெல் தேவையுடைய மாவட்டத்திற்கு அரிசியாக மாற்றப்பட்டு வழங்கப்படவுள்ளதாக அரச அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 500இற்கு மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மொழிமூலம் 400இற்கு மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களும் தமிழ் மொழிமூலம் 700இற்கு மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களும் நிலவுகின்றன. அது மாத்திரமன்றி கல்வித்துறைசார் வெற்றிடங்களும் நிலவுகின்றமையால் மாணவர்களின் கல்விநிலை பாதிப்படையக்கூடிய நிலைவரம் உள்ளதாக இதன்போது கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் குழுவின் அவதானத்திற்கு கொண்டு வந்தார்.

கன்னியா பிரதேசத்தில் காணப்படும் கழிவகற்றல் பிரச்சினை, நீண்டகாலமாக காணிகளில் வசிப்பவர்களுக்கான காணி ஆவணங்களை வழங்குவதன் அவசியம், மேய்ச்சல்தரை, யானை வேலிகள் அமைத்தல், மணல் அகழ்வு உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன. இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறுக்கல் வீதியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலின்படி, குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்த 4,480 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் புதன்கிழமை (29) ஆஜர்படுத்தியபோது ஏப்ரல் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பற்சிகிச்சை விழிப்புணர்வு கருத்தரங்கு

(பாண்டிருப்பு செய்தியாளர்)

"Be proud of your mouth for a life time of smile" எனும் தொனிப்பொருளின் கீழ் உலக வாய் சுகாதாரம் பேணுதல் தினமானது கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஆர்.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் டாக்டர் ஜே.மதன், பற்சிகிச்சை வைத்தியர்கள், தாதிய பரிபாலகி, தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்தியசாலையின் அனைத்து ஊழியர்களும் கலந்துகொண்டனர். இங்கு வைத்தியசாலையின் பற்சிகிச்சை பிரிவின் சிறப்பு பற்றியும் பற்சுகாதாரம் பேணுவதன் நோக்கம் பற்றியும் வாய் புற்றுநோய் தொடர்பான கருத்துகள் ஆகியன தொடர்பாக பற்சிகிச்சைப் பிரிவின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் ஏ.வகைடினால் விரிவுரை வழங்கப்பட்டது.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவு பீடமாக தரமுயர்வு

(மாளிகைக்காடு செய்தியாளர்)

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் தற்போது காணப்படுகின்ற சித்த மருத்துவப் பிரிவை பீடமாக தரமுயர்த்துதல் குறித்து கடந்த பெப்ரவரி 06ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அதற்காக போதியளவு கல்வி மற்றும் ஊழியர்கள் வசதிகள் உள்ளனவா என்பதை ஆராய்ந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, சித்த மருத்துவப் பிரிவை பீடமாக மாற்றம் செய்வதற்குப் போதுமானளவு மனித வளம் மற்றும் பௌதீக வளங்கள் காணப்படுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

கல்வியமைச்சர் சமர்ப்பித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு குறித்த சித்த மருத்துவப் பிரிவை, பீடமாக தரமுயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மார்ச் 27ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் திருகோணமலை வளாக முதல்வராக பணியாற்றிய காலப்பகுதியில் சித்த மருத்துவப் பிரிவை பீடமாக தரமுயர்த்தும் முயற்சிகளை மேற்கொண்டு அதற்கான பணிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துவந்த நிலையிலேயே இத்தரமுயர்வுக்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. இத்தரமுயர்வு விடயத்தில் திருகோணமலை வளாக தற்போதைய முதல்வர் மற்றும் அதன் ஊழியர்களின் பங்களிப்பும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# இலவசக் கல்வி வழங்கும் ஒரே நாடு இலங்கையாகும்!

## கிழக்கு கல்வியமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் முஸ்இல்

(அப்துல்சலாம் யாசீம், சீனக்குடா செய்தியாளர்)



முதலாம் தரம் முதல் பல்கலைக்கழகம் வரை முற்றிலும் இலவசக் கல்வி வழங்கும் முதன்மை நாடு இலங்கையாகும் - என கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.ஸீ.எம்.முஸ்இல் தெரிவித்தார்.

திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியின் முதலாம் தர மாணவர்கள் வரவேற்பு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் கே.ரவிதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கும்புறுப்பிட்டி மெதடிஸ்ட் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் எஸ்.கீதபொன்கலன், உவர்மலை கண்ணகி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ எஸ்.ஐ.சாந்தமூர்த்தி குருக்கள், அன்புவழிபுரம் தேவாலய அருட்தந்தை சுகுனேந்திரன் குரூஸ் ஆகியோரும் ஏனைய அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் முதலாம் தரம் முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக சகல பாடசாலை மாணவர்களுக்கும் இலவச பாடநூல், இலவச சீருடை என்பனவும் வழங்கப்படுகின்றன. இதனை விட தேவையான மாணவர்களுக்கு இலவச மதியஉணவு, சப்பாத்து என்பன வழங்கப் படுகின்றன.

மாணவர்களுக்கு இப்படியான ஒட்டுமொத்த சலுகைகளையும் வழங்கும் நிலை வேறு எந்த நாட்டிலும் இல்லை. நாடு தற்போது பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து பொருட்களின் விலையேற்றம், கட்டணங்கள் அதிகரிப்பு என்பன இடம்பெற்றாலும் அரசாங்கம் மாணவர்களுக்கு வழங்கவேண்டிய பாடநூல், சீருடை போன்றவற்றில் எந்தக் குறையும் வைக்கவில்லை. கடதாசி பற்றாக்குறை நிலவிய காரணத்தினால் புத்தகங்கள் அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டாலும் ஏற்கனவே வழங்கப்பட்டதைப்போன்று சகல பாடப்புத்தகங்களையும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேபோல சீருடை விநியோகத்துக்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிலவேளை இவை மாணவர்களுக்கு வந்து சேர்வதில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்கும். தற்போது வழங்கப்படும் மதிய உணவை பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு விஸ்தரிப்பதற்கும் தேவையான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் ஏனைய நாட்டு மாணவர்களோடு ஒப்பிடுகையில் இலங்கை மாணவர்கள் அதிர்ஷ்டசாலிகள்.

மேலும், கல்வித் திட்டமும் தேவைக்கேற்ப காலத்துக்கு காலம் மாற்றப்பட்டு வருகின்றது. தற்போது முதலாம்தர மாணவர்களுக்கு செயற்பாட்டு ரீதியான வாய்மொழி ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் சகல மாணவர்களும் முதலாம் தரத்திலிருந்து ஆங்கிலம் தொடர்பான அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்வர்.

திருகோணமலை நகரைப் பொறுத்தவரை வேகமாக முன்னேறிவரும் பாடசாலைகளுள் உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியும் ஒன்று. இங்கு நல்ல அதிபரும் ஆசிரியர் குழாமும் இருப்பதே இதற்குக் காரணம். இப்பாடசாலை பொதுப் பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளைப் பெற்று வருகின்றது. இதனால் இந்தப் பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்க்க பெற்றோர் முன்னுரிமை கொடுத்து விண்ணப்பிக்கின்றனர் - என்றார்.

# ரமழானில் விற்கப்படும் சிற்றுண்டிகளின் விற்பனை தொடர்பிலான கலந்துரையாடல்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சம்மாந்துறையில் புனித நோன்பு காலத்தில் சிற்றுண்டிகளின் விலை மற்றும் உணவுகளின் தரம், பாதுகாப்பு தொடர்பாக தேநீர்ச்சாலை உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை(28) இடம்பெற்றது.

நன்மைகளை சேகரிக்கவேண்டிய இந்த மாதத்தில் நியாயமான விலைகளில் சுத்தமாகவும் சுகாதாரமுறையிலும் தயாரித்த உணவுகளை மக்களுக்கு வழங்க உணவகங்கள் முன்வர வேண்டும் - என சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தேநீர்ச்சாலை உரிமையாளர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இதன்போது தேநீர்ச்சாலை உரிமையாளர்களின் கருத்துகள் பெறப்பட்டு அதன் பின்னர் தரமான உள்ளீடுகளுடன் தயாரிக்கப்படும் சம்ஸா, பெட்டிஸ், றோல்ஸ், கட்லட், ஜம்பர், மரக்கறி ரொட்டி ஆகியவற்றின் ஆகக்கூடிய விலையாக 40 ரூபாவாக விற்பனை செய்வதுடன், இருப்பினும் முட்டை உள்ளீடுகளுடன் தயாரிக்கப்படும் சிற்றுண்டிகளுக்கு விலை நிர்ணயிக்கப்படவில்லை என்பதுடன், சிற்றுண்டிச்சாலைகளில் குறித்த உணவுப் பொருட்களின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.கபீர், சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை தலைவர் கே.எம்.கே.றம்சின் காரியப்பர், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் புலன் விசாரணை அதிகாரி ஏ.ஏ.அஹம்மட் சர்பான், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் பீ.வரதராஜன், மாவட்ட மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஐ.எல்.றாசீக், சம்மாந்துறை பிரதேச செயலக கிராம சேவக நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.தாஸிம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சம்மாந்துறை வர்த்தக மற்றும் தொழில்கள் சம்மேளனத் தலைவர் ஏ.ஹக்கீம், செயலாளர் எம்.எச்.எம்.ஹாரிஸ், சம்மாந்துறை வர்த்தக சங்கத்தின் செயலாளர் டி.எல்.கபீர், தேநீர்ச்சாலை உரிமையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# போடியார் புலம்பல்!



ஏறாவூர் புன்னைக்குடா வீதியின் தமிழ் பெயரை கிழக்கு ஆளுநர் பொடிச்சி "எல்விஸ் வல்கம" எண்டு சிங்கள பெயரா மாத்தப்போறாவாம் எண்டு ஏறாவூர் அமைச்சர் நசீர் அகமட் நானா கொதிக்கிறாரு எலுவா?

இந்த பொடிச்சிக்கு வேல மட்டக்களப்பு மாவட்டத்தில சிங்களக் குடியேற்றம், மேச்சல்தரைகள அபகரித்து அவங்கட ஆக்கள குடியேற்றிர, வீதிகளுக்கு சிங்கள பெயர் வைக்கிற இதுகள தட்டிக்கேக்க நம்மட கிழக்க மீட்கப்போன இரண்டு இராஜாங்க மந்திரிகளும் கவுட்டுக்க கையை வச்சித்து படுத்தா இதுதான் நடக்கும்.! அவங்க கிழக்க மீட்க பாராளுமன்றம் போகல்ல கிழக்க விக்கத்தான் போயிரிக்காங்க.!

# கிழக்கிலிருந்து காங்கேசன்துறைக்கு போக்குவரத்து சேவைகளை ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டுகோள்



## காரைக்கால் துறைமுகத்திற்கு செல்லும் பயனைப் பெறலாமென அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு மாஹிர் கடிதம்

(எருவில் செய்தியாளர்)

இந்தியாவின் புதுச்சேரியிலுள்ள காரைக்கால் துறைமுகத்திற்கும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் இடையில் ஆரம்பிக்கப் படவிருக்கும் பயணிகள் படகுச் சேவையின் பயனை கிழக்குவாழ் மக்களும் அனுபவிக்கும் வண்ணம் கிழக்கிலிருந்து, காங்கேசன்துறைக்கு நேரடி இணைப்பு போக்குவரத்து சேவைகளை ஆரம்பிக்க ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், சமூக செயற்பாட்டாளருமான ஐ.எல்.எம்.மாஹிர், துறைமுகங்கள் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

இந்த படகுச் சேவை மூலம் கிழக்கிலுள்ள வர்த்தகர்களும் இலகுவாக இந்தியாவுடனான வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தி, திருத்தல யாத்திரைகளுக்கான இலகுவசதி போன்ற வாய்ப்புகள் கிடைக்கவும் உள்ளன.

இந்தப் பயன்கள் கிழக்கு மக்களுக்கும் கிடைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டுமென தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள தவிசாளர் மாஹிர், குறித்த படகுச் சேவைகள் இடம்பெறவிருக்கும் தினங்களை மையப்படுத்தி மட்டக்களப்பிலிருந்து காங்கேசன்துறைக்கான நேரடி இணைப்பு ரயில் சேவைகளை ஆரம்பிக்க ஆவன செய்யுமாறும் இதே அடிப்படையில் கிழக்கின் முக்கிய நகரங்களிலிருந்து குறிப்பிட்ட தினங்களில் காங்கேசன்துறைக்கான போக்குவரத்து பஸ் சேவைகளை ஆரம்பிக்க அமைச்சர் ஆவன செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இச்சேவைகளை ஆரம்பிப்பதன் மூலம் கிழக்கு மாகாண மக்களுக்கு குறித்த படகுச் சேவையின் பயனை அனுபவிக்க முடியுமெனவும் முன்னாள் தவிசாளர் மாஹிர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தவிரவும், இந்தியாவின் புதுச்சேரியிலுள்ள காரைக்கால் துறைமுகத்திற்கும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கும் இடையிலான படகுச் சேவை ஏப்ரல் 29ஆம் திகதிமுதல் ஆரம்பமாகுமென அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி காரைக்கால் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு குறித்த தினத்தில் (ஏப்ரல் - 29) புதிய படகுச் சேவையின் முதல் படகு வருகை தருமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தப் படகுச் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக காங்கேசன்துறை துறைமுகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், புதிய பயணிகள் முனையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது. அதற்காக துறைமுக அதிகார சபை 144 மில்லியன் ரூபா நிதியைப் பெற்றுக் கொடுத்துள்ளதுடன், அதற்கான நிர்மாணப் பணிகள் இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தப் படகுச் சேவையின் ஒரு வழிப்பயணத்திற்கு பயணி ஒருவரிடமிருந்து 50 டொலர்களை (சுமார் 16 ஆயிரம் ரூபா) அறவிடப் படுவதுடன், 100 கிலோ கிராம் பொருட்களை பயணி ஒருவர் கொண்டுவர அனுமதிக்கப் படுவரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு படகில் ஒரே தடவையில் 150 பயணிகள் ஏற்றிச் செல்லப்படுவரெனவும், காரைக்கால் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு நான்கு மணிநேரத்தில் படகு காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடையுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல் கட்ட நடவடிக்கைகளின்போது, பகல் நேரங்களில் மட்டுமே இந்தப் பயணிகள் படகுச் சேவை இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தப் பயணிகள் படகுச் சேவை ஆரம்பிக்கப்படவிருப்பது குறித்து தவிசாளர் மாஹிர் மகிழ்ச்சியும் வரவேற்பும் தெரிவித்துள்ளதுடன் அமைச்சருக்கு நன்றியும் தெரிவித்துள்ளார்.

# இலவச அரிசி வழங்கிவைப்பு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

2022/2023 பெரும்போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செய்தல் மற்றும் நெல் கையிருப்பினை அரிசியாக்கல் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி அடையாளம் காணப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (26) களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 13 ஆயிரத்து 429 குடும்பங்கள் இத்திட்டத்தில் பயனடையவுள்ளன. இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், சமூர்த்தி தலைமையக முகாமையாளர், சமூக சேவை உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

(அக்கரைப்பற்று மத்திய செய்தியாளர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் வாழும் தெரிவுசெய்யப்பட்ட நலத் திட்ட பயனாளிகளுக்கு அரசினால் இலவசமாக முதற்கட்ட அரிசி வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சாரின் வழிகாட்டலில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பீ.எம்.ஹுசைன் தலைமையில் அக்கரைப்பற்று 14ஆம் பிரிவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ஜே.நிஹ்மதுள்ளா, வலய முகாமையாளர் என்.ரீ.நழீம், கணக்காய்வு உத்தியோகத்தர் இசட்.ஏ.ரகுமான், மாவட்ட இணைப்பாளர் நேசராஜா, பிரிவுக்குப் பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் 28 கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 8 ஆயிரத்து 109 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.





பொத்துவில் ஹிதாயபுர சகவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். ஹிதாயபுர சகவாழ்வு சங்கத்தின் தலைவரும் பிரபல சமூக செயற்பாட்டாளருமான யூசுப் மொஹிதீன் தலைமையில் அல்-ஹிதாயா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், சங்கைக்குரிய ஆலிம்கள், சகவாழ்வு சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் பிரதேச வாழ் மக்கள் கலந்துகொண்டனர். (திகாமடுல்ல செய்தியாளர்)



மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) பெண்கள் பிரிவு மற்றும் நற்பிட்டிமுனை லாபீர் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளுக்குமான காணி கையளிப்பு புதன்கிழமை (29) கல்முனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியினால் உத்தியோகபூர்வமான முறையில் இரு பாடசாலைகளின் காணி பத்திரங்கள் கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீமிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக காணிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எச்.எல்.எம்.மபாஸ் மற்றும் காணி பயன்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எம்.ஜௌபர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(பாறுக் ஷிஹான்)

# முதலாம் தர மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு







(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயத்தில் முதலாம் தர மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (28) சிறப்பாக இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் மு.சண்டேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், திருக்கோவில் வலயக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் மாதுரி மயூரன், திருக்கோவில் வலய ஆசிரியர்வாண்மை விருத்தி நிலைய முகாமையாளர் ந.சுதாகரன், அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் வெ.இராசவேல், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் வெ.சண்முகநாதன் உள்ளிட்ட பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக அதிதிகளை வரவேற்கும் நிகழ்வைத் தொடர்ந்து இரண்டாம் தர மாணவர்கள் முதலாம் தர மாணவர்களுக்கு மாலை அணிவித்து சம்பிரதாயபூர்வமாக வெற்றிலை கொடுத்து வரவேற்றனர். பின்னர் இணைந்துள்ள புதிய மாணவர்களை இரண்டாம் தர மாணவர்கள் பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றதுடன், பெற்றோர்கள் வரவேற்று இனிப்புப் பண்டங்களையும் பரிசுப்பொதிகளையும் வழங்கினர். மண்டபத்தில் இடம்பெற்ற அதிபரின் தலைமையுரையைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

# கரையோரப் பாதுகாவலர் மீது தாக்குதல்

(அப்துல்சலாம் யாசீம்)

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெண் உத்தியோகத்தர் ஒருவர் தாக்குதலுக்குள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை (28) இடம்பெற்றுள்ளது. இதன்போது திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கரையோரப் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றிவரும் ஊர்மிளா கிருபாகரன் (45 வயது) என்பவரே தாக்குதலுக்குள்ளானதாக தெரியவருகிறது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

திருகோணமலை- சமுத்ராகம பகுதியில் சட்டவிரோதமாக கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக குறித்த பகுதிக்குச் சென்று அறிவுறுத்தல் வழங்கிய போது தன்னை தாக்கியதுடன், தனது கடமைக்கு இடையூறு விளைவித்ததாகவும் திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த முறைப்பாட்டையடுத்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், சம்பவம் தொடர்பில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளரை தொலைபேசி மூலம் பல தடவைகள் தொடர்புகொண்டபோதிலும் அவர் அவ்வழைப்பை ஏற்காமல் துண்டித்தமையும் குறிப்பிடத்தக்கது.



கோறளைப்பற்று வாழைச்சேனை, தியாவட்டவான் பதிவாளர் பகுதிக்கான முஸ்லிம் விவாகப் பதிவாளராக மௌலவி ஏ.ஜீ.சாதிக்கீன் மதனி நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா செவ்வாய்க்கிழமை (28) வழங்கினார்.

(மீராவோடை செய்தியாளர்)



பட்டிருப்பு வலயக்கல்விப் பணிமனைக் குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான இலவச பாடசாலை சீருடைத் துணிகள் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரனின் வழிகாட்டலில் விநியோகிக்கப்பட்டது. மண்முனை தென்எருவில்பற்று கல்விக் கோட்டத்திலுள்ள 33 பாடசாலைக்கும் சீருடைத் துணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் பி.திவிதரன் தெரிவித்தார்.

(பாண்டிருப்பு செய்தியாளர்)

eastthamilan@gmail.com

# புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு





(பாண்டிருப்பு செய்தியாளர்)

பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் ஒன்றுக்கு புதிதாக இணைந்துகொண்ட மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு அதிபர் கே.செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக்கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜெயந்திமாலா பிரியதர்சன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். அத்துடன், பிரதி அதிபர்களான புவனேஸ்வரி, சண்முகநாதன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் செல்லத்துரை, பழைய மாணவர் சங்க செயலாளர் புருஷோத்மன் உட்பட பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தரம் இரண்டில் கல்வி பயிலும் மாணவர்களினால் தரம் ஒன்றிற்கு புதிதாக இணைந்துகொண்ட மாணவர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டு வெற்றிலை கொடுத்து வரவேற்கப்பட்டனர். மேலும் ஆரம்பப் பிரிவு மாணவர்களினால் கலை நிகழ்வுகளும் நடைபெற்றதுடன், அதிதிகளினால் புதிய மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை கடற்கரைப் பிரதேசத்தில் நூராணிய்யா மையவாடிக்கு முன்பாகவுள்ள பகுதியில் பாரியளவிலான திண்மக் கழிவுகள் கரையொதுங்குகின்றன. இவை தங்களின் கரைவலை மீன் பிடிக்குத் தடையாக உள்ளதாகவும் இதனால் தங்களது மீன் வலைகள் பாரியளவில் சேதமடைந்துள்ளதாகவும் பல்லாயிரக் கணக்கான ரூபாக்கள் நஷ்டம் ஏற்பட்டுளதாகவும் இப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)



# பேரீச்சம்பழம் விநியோகம்




(மாளிகைக்காடு, பொலிவேரியன் செய்தியாளர்கள்)

புனித ரமழான் நோன்பை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்திற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட பள்ளிவாசல்களுக்கான பேரீச்சம்பழம் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (28) சாய்ந்தமருது ஜும்ஆப் பெரியபள்ளிவாசலில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.சுபைதீனின் ஒருங்கிணைப்பின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் கலந்துகொண்டதுடன், விசேட அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் கலந்துகொண்டார்.

மேலும் சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிப்பதுல் கரீம், சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் செயலாளர் ஏ.எல்.எம்.மன்சூர், சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் ஆதம்பாவா (ரஷாதி), சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஏ.எம்.பர்ஹான், ஏனைய பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களும், பள்ளிவாசல் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கர்ப்பிணிகளுக்கான நிதி வழங்கிவைப்பு



(மீனோடைக்கட்டு செய்தியாளர்)

கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் போசணை மட்டத்தை உயர்த்தி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் நோக்கில் அரசினால் சமுர்த்தி வங்கிகள் ஊடாக 10ஆயிரம் ரூபா வீதம் நிதி வழங்கும் நிகழ்வு தேசிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது.

இத்திட்டத்திற்கமைய இறக்காமம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 382 கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் செவ்வாய்க்கிழமை (28) இறக்காமம் சமுர்த்தி வங்கியில் வழங்கப்பட்டது.

சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் ரீ.கே.றஹ்மத்துல்லா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸ்ஸான் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்ததுடன், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.சி.எம்.தஸ்லீம், கருத்திட்ட முகாமையாளர் திருமதி பிரியந்தி, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.முகம்மட் இம்தாத் உள்ளிட்ட அதிதிகள் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான பணத்தை வழங்கினர்.

# வெள்ளிவிழா காணும்

# நாமகள் தமிழ் மகா வித்தியாலயம்




பாடசாலையின் முகப்புத் தோற்றம்



பாடசாலை அதிபர்
திரு. செந்தில்குமார்

எழில் கொஞ்சும் மலையகத்தின் நுழைவாயிலின் மாத்தளை மாவட்டத்தில் நாவுல எனும் நகரம் அமைந்துள்ளது. இச்சிறு நகரின் மத்தியில் அமைந்துள்ள நாவுல பிரதான பஸ் தரிப்பிடத்தையொட்டி வலதுபுறம் ஊடறுத்துச் செல்லும் வீதியினூடாக சுமார் 250மீற்றர் உள்நோக்கி வருகையில் அமைந்துள்ள கணுமுலயாய எனும் இடத்தில் கம்பீரமாய் 'நாமகள் தமிழ் மகா வித்தியாலயம்' அமைந்துள்ளது.

1992ஆம் ஆண்டு அமைச்சர் மொண்டிகுமார கொபல்லாவவின் உதவியில் பாடசாலைக்கு காணி வழங்கப்பட்டதுடன், கிராம மக்களின் தூண்டுதல்களாலும் நாவுல வலய கல்விப் பணிப்பாளர் அமுனுகம மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை ஆகியோரின் துரித முயற்சியின் பலனாகவும் பாடசாலைக்கான நிரந்தரக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்படும் வரையில் தற்காலிகமாக நாவுல எனும் இடத்தில் 1998.01.15ஆம் திகதி கணுமுலயாய பிரஜாசாலாவ மண்டபத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் 59 மாணவர்களைக் கொண்டு ஆரம்பப்பிரிவு பாடசாலையாக மா/நா/கணுமுலயாய தமிழ் வித்தியாலயம் எனும் நாமத்துடன் உதயமான இப்பாடசாலையின் அதிபராக திரு. பொ. பிரகாஸ் கடமையை பொறுப்பேற்க திரு. முரளிதரன், திருமதி விஜிதலதா ஆகிய இரு ஆசிரியர்களுடன் இயங்கிவந்தது.

சுமார் ஒரு வருடத்திற்கும் அதிகமாக தற்காலிக இடத்தில் இயங்கிவந்த பாடசாலைக்கு 1999ஆம் ஆண்டு புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது. ஆரம்பப் பாடசாலை எனும் தரத்திலிருந்த பாடசாலை, கனிஷ்ட பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு மாணவர்களின் தொகை அதிகரிக்க இன்னுமொரு கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும் 2000ஆம் ஆண்டு இடம்பெற்றது.

அப்போதைய அதிபர் பொ.பிரகாஸ் அவர்களின் விடாமுயற்சியினால் பாடசாலை சகல துறைகளிலும் முன்னேறி நாமகள் தமிழ் வித்தியாலயம் என்று பெயர் மாற்றப்பட்டு தரம் 11 வரையான பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.


2005ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு முகம்கொடுத்த ஏழு பேரில் இருவர் கணிதப் பாட சித்தியுடன் உயர்தரத்திற்கு தெரிவாகினர். 2011ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியோரில் 156 புள்ளிகளைப்பெற்று பேரின்பநாயகம் ஜெயகுமாரி முதல்முறையாக சித்தியடைந்தமை பெருமைக்குரிய விடயமாகும்.

2015ஆம் ஆண்டு பாடசாலை அதிபராக திரு. சு.செந்தில்குமார் பொறுப்பேற்று இன்றுவரை சிறப்பாக தலைமை தாங்கி நடத்திவருகின்றார். இவரது காலப்பகுதியில் பாடசாலை பல வகைகளில் மாற்றமும் வளர்ச்சியும் கண்டு வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு மாற்றுக்கருத்து இல்லை.

பின்னர், 2019ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு முதன் முறையாக 2021(2022)ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் 100வீத சித்தியை பெற்றதோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்திற்கு மாணவி ஒருவரும் தெரிவாகியுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

அந்தவகையில், 30.03.2023 வெள்ளி விழா காணும் இவ்வித்தியாலயம் தொடர்ந்து பல வெற்றிகளையும் பெற்று மென்மேலும் வளர்ச்சியடைய பாடசாலை சமூகம் சார்பாக வாழ்த்துகள்.

**தொகுப்பு:-**
**ஏற்பாட்டுக் குழு**






அதிபர் மற்றும் ஆசிரியர் குழாம்



அதிபர் மற்றும் தரம் 10 மாணவர்களுடன் ஆசிரியை செல்வி. திஷாந்தினி




அதிபர் மற்றும் பேண்ட் வாத்தியக் குழு மாணவர்கள்



அதிபர் மற்றும் தரம் 4 மாணவர்களுடன் ஆசிரியை திருமதி பாசமலர்



அதிபர் மற்றும் தரம் 6 மாணவர்களுடன் ஆசிரியை அமந்தா லியனகே

## யாழில் போதை விற்பனை: மாணவன் உள்ளிட்ட 10 பேர் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தை அண்மித்த பகுதியில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரும், அவரின் வாடிக்கையாளர்கள் 10 பேரும் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் நேற்று முன்தினம் (28) செவ்வாய்க்கிழமை மாவட்ட குற்றச்சாட்டு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பெண் வியாபாரியிடம் போதைப் பொருள் வாங்கி பாவிக்கும் 10 வாடிக்கையாளர்களும் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு அவர்களிடமிருந்து போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர் எனவும் கைதுசெய்யப்பட்டோர் 17 தொடக்கம் 22 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஆதிலிங்கேஸ்வரர் ஆலய அழிப்புக்கு எதிராக நல்லூரில் போராட்டம்





(யாழ். நிருபர்)

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லூரில் போராட்டம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் நல்லை ஆதீனம் முன்பாக சைவ அமைப்புகளின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் நடைபெற்றது.

''தொல்லியல் திணைக்களமே தமிழர்களை தொலைக்காதே, ஆதிசிவன் கோவில் தொடர்ந்து இலக்கு வைக்கப்படுவது ஏன்?, சிவனை அசைத்தவனே அவனின் திருக்கூத்தை விரைவில் உணருவாய், சிவன் சொத்தை தீண்டினால் குலமே நாசமாகும்'' போன்ற வாசகங்களை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

## நல்லூர் பிரதேச நீர் வளங்கள்சார் களப்பயணம்



(யாழ். நிருபர்)

நல்லூர் பிரதேச நீர் வளங்கள்சார் களப்பயணம் கடந்த சனிக்கிழமை (25) பேராசிரியர் எஸ்.சிறீஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்றது.

களப்பயணத்தின்போது அரியாலை நீர்நொச்சித் தாழ்வுக்குளம், பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருடனான நீர் சார்ந்த உரையாடலும், நல்லூர் லிங்கம் கூழ் பாரில் ஐஸ்கிறீம் தயாரிப்பில் நீரின் பயன்பாடு குறித்தும் கோண்டாவில் குடிநீர் விநியோக நிலையம், யாழ். பல்கலைக்கழக கோண்டாவில் மாணவர் விடுதியில் கழிவுநீர் பயன்பாடு போன்றன குறித்தும் ஆய்வுக் களப்பணி இடம்பெற்றது.

இக் கள ஆய்வில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் WASPAR செயற்றிட்டம் ஊடாக உருவாகிய வடக்கின் நீர் உரையாடல் மன்றம் மற்றும் Young Water Professional North இணைந்து ஒழுங்கமைத்திருந்தன.

குறித்த களப்பயணத்தில் நீர் சார்ந்த துறைமையாளர்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டதுடன், நல்லூர் பிரதேச செயலக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான விசேட கருத்தாடல் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மீசாலை விக்கினேஸ்வராவின் கால்கோள் விழாவும் கல்வி ஊக்குவிப்பு நிகழ்வும்



(சாவகச்சேரி நிருபர்)

யா/மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்திற்கு தரம் ஒன்றிற்கு மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவும், கல்வி ஊக்குவிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் (28) பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை முதல்வர் சுதாமதி தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், லண்டனில் வசிக்கும் பாடசாலையின் பழைய மாணவர்களான ஆர்.விஜயரஞ்சினி, எஸ்.நவரஞ்சினி, ஜே.ஸ்ரீரஞ்சினி மற்றும் பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் க.ரஜனிகாந்தன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது தேவைப்பாடுடைய தெரிவு செய்யப்பட்ட இரு மாணவர்களுக்கு சைக்கிள்களும், மாணவி ஒருவருக்கு மடிக்கணினியும், 5 மாணவர்களுக்கான மாதாந்த உதவுத்தொகைகளும் வழங்கப்பட்டதுடன், மாணவர்கள் சிலருக்கு புத்தகப் பொதிகளும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## ஆதிலிங்கம் அகற்றப்பட்டமை தொடர்பில் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்குக!

### பொலிஸ்மா அதிபரிடம் அமைச்சர் ஜீவன் கோரிக்கை



வவுனியா, நெடுங்கேணி - வெடுக்கு நாறிமலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கம் சிலை உடைத்து வீசப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி முழுமையானதொரு அறிக்கையை வழங்குமாறு பொலிஸ்மா அதிபரிடம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தான் வவுனியா, வெடுக்குநாறி மலைக்கு செல்லவுள்ளதாகவும், இதன்போது சேதமாக்கப்பட்ட சிலை மீள் பிரதிஷ்டை செய்யப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

வவுனியா, நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறி மலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கம் சிலை உடைத்து வீசப்பட்ட மற்றும் விக்கிரகங்கள் மாயமாகியுள்ள சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

"இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்த பின்னர் நானும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தினோம். உரிய விசாரணைகளை முன்னெடுத்து, சட்டத்தை செயற்படுத்துமாறு ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்தார். நானும் இது தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இலங்கை முன்னேறுவதற்கு இன, மத நல்லிணக்கம் என்பது மிக முக்கியம். அதனை ஏற்படுத்துவதற்கு எமது அரசு தீவிரமாக செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் அதனை சீர்குலைக்கும் வகையில் இடம்பெறும் சம்பவங்களை அனுமதிக்க முடியாது. அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்'' - என்றும் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டார்.

## கட்டுப்பாட்டு விலையை மீறி முட்டை விற்ற 11 பேர் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

கட்டுப்பாட்டு விலைகளை மீறி முட்டை விற்பனை செய்த 11 வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் மீது வழக்குத் தொடர இரத்தினபுரி மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு காரியாலயம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இரத்தினபுரி, காவத்தை, வேவல்வத்தை, குருவிட்ட ஆகிய பிரதேசங்களில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வெள்ளை முட்டை 44 ரூபா, சிவப்பு முட்டை 46 ரூபா என கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இவர்கள் முட்டைகளை 50 முதல் 60 ரூபா வரை விற்பனை செய்துள்ளதாகவும் எனவே இவர்கள் மீது வழக்குத் தொடரப்படவுள்ளதாகவும் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும், கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யக்கூடிய வகையில் நாட்டில் எங்கும் முட்டை இல்லை எனவும் அதிகாரிகள் தமக்கு குறைந்த விலையில் முட்டை விநியோகிக்க முடியுமாக இருந்தால் தாமும் கட்டுப்பாட்டு விலையில் முட்டைகளை விற்பனை செய்வதற்குத் தயாராக இருப்பதாகவும் வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## பேரினவாத ஒடுக்குமுறைக் கரங்களே வெடுக்குநாறி மலையில் வெறியாட்டம்

### புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி கண்டனம்



இலங்கையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த சிங்கள பௌத்த பேரினவாத ஒடுக்குமுறையின் தொடர்ச்சியே வவுனியா வடக்கு வெடுக்குநாறிமலையில் இருந்து வந்த சைவ விக்கிரகங்கள் உடைத்து எறியப்பட்டுள்ள மதவெறிச் செயலாகும். திட்டமிட்டவகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள இவ் இழிதரச் செயலுக்குப் பின்னால் ஆளுந்தரப்புப் பேரினவாதிகளின் நேரடி-மறைமுகக் கரங்கள் இருக்கின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் கடுமையான பொருளாதாரச் சுமைகளினால் பாதிக்கப்பட்டு அன்றாட வாழ்க்கை நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அதேவேளை, ஐ.எம்.எவ் எனும் சர்வதேசக் கந்துவட்டிக்காரரிடம் வாங்கியுள்ள கடனுக்கு நாட்டு வளங்கள் தனியார் மயத்தின் மூலம் தாரை வார்க்கப்படவுள்ளன. இதன் மூலம் நாடும் மக்களும் மோசமான அரசியல் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்களிடையே எழுந்துள்ள கோபாவேசங்களைத் திசை திருப்புவதற்கு ரணில்-ராஜபக்ஷ ஆட்சிக்கு உள்ள ஒரே துருப்புச் சீட்டு இன, மத, பிரதேசப் பிளவுகளையும் குரோதங்களையும் தூண்டி மோதல்களாக்கி அவற்றின் மறைவில் தம்மையும் தமது ஆளும் வர்க்க நலன்களைகளையும் பாதுகாப்பதேயாகும்.

அதனையே ஜே.ஆர் வழிவந்த ரணிலும் பின்னால் இருந்து இயக்கி வரும் ஊழல் மன்னர்களான ராஜபக்ஷக்களும் கச்சிதமாக முன்னெடுத்து வருகிறார்கள். இத்தகைய இன, மதப் பிளவுகளைத் தூண்டுவதிலும் உசுப்பேத்துவதிலும் அந்நிய சக்திகளும் அவர்களது உள்நாட்டு முகவர்களும் மும்முரமாகி நிற்கின்றனர். ஆதலால் பேரினவாத ஒடுக்குமுறைக் கரங்களை எதிர்ப்பதற்கு குறுகிய நிலைப்பாடுகளையோ அந்நிய சக்திகளுக்கு துணை போவதையோ வழிமுறையாகக் கொள்ள முடியாது என்பது உணரப்படல் வேண்டும்.

உழைக்கும் மக்கள் எதிர்நோக்கி நிற்கும் பொருளாதார அரசியல் சமூக நெருக்கடிகளுக்கான பரந்த போராட்டத்தில் பேரினவாத ஒடுக்குமுறைகளை எதிர்க்கும் நிகழ்ச்சித் திட்டங்களையும் இணைத்து முன்னெடுத்துச் செல்வதே சரியான வெகுஜனப் பாதையாக அமைய முடியும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## வட்டவளை ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களின் போராட்டம் முடிவு

நிர்வாகம் வழங்கிய உறுதிமொழியையடுத்து வட்டவளை ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பு போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

சம்பள அதிகரிப்பு, போனஸ் கொடுப்பனவு உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து வட்டவளை ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் கடந்த சில நாட்களாக அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு போனஸ் வழங்குவதற்கு நிர்வாகம் மறுப்பு தெரிவித்துள்ளது, அது வழங்கப்பட வேண்டும் என்பது அவர்களின் பிரதான கோரிக்கையாக இருந்தது.

இந்நிலையில் இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தவிசாளரும், எம்.பியுமான மருதபாண்டி ராமேஷ்வரன் ஆகியோரின் ஆலோசனைக்கமைய இ.தொ.கா பிரதிநிதிகள் வட்டவளை ஆடைத்தொழிற்சாலைக்கு சென்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் கணபதி கனகராஜ், அமைச்சரின் இணைப்பு செயலாளர் அர்ஜூன் ஜெயராஜ், அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.ராஜரட்ணம் ஆகியோர் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத் தரப்பினருடன் அவர்கள் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். இதன்போது சம்பள உயர்வு அவசியம், போனஸ் வழங்கப்பட வேண்டும், தற்போது வழங்கப்படும் உணவு மாற்றப்பட வேண்டும், சில மேற்பார்வையாளர்களின் செயற்பாடுகள் மோசமாக உள்ளன என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை தொழிலாளர்கள் முன்வைத்தனர்.

இதற்கு உணவு மாற்றம், மேற்பார்வையாளர் விவகாரம் உள்ளிட்ட விடயங்களுக்கு நிர்வாக தரப்பில் சாதக பதில் வழங்கப்பட்டுள்ளது. போனஸ் தொடர்பில் மேலிடத்தில் கதைத்துவிட்டு அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இரத்தினபுரி தமிழ் ஆரம்ப வித்தியாலயத்தில் அரசாங்கத்தின் அறிவித்தலுக்கமைய தரம் ஒன்றுக்கு புதிய மாணவர்கள் நேற்றுமுன்தினம் உள்வாங்கப்பட்டனர். பாடசாலை அதிபர் எஸ்.ஆர். இரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சப்ரகமுவ மாகாண பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.ஏ.எச். ஹூஸ்னா கலந்துகொண்டார். (பெல்மதுளை செய்தியாளர்)

## வட்டவளையில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(செ. திவாகரன்)

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை, தியகல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில், வீரபிட்டிய, மொரகஹாபள்ளம பிரதேசத்தைச் சேர்ந்த பிரதிப் குமார அஸ்விஸ் (வயது - 30) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குளியாப்பிட்டிய பகுதியிலிருந்து ஹட்டன் நோக்கி வந்துகொண்டிருந்த லொறியும், ஹட்டனில் இருந்து கினிகத்தேனை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே விபத்துக்குள்ளாகியுள்ளன.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே பலியானார் என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நடைபெறும்போது வட்டவளை பகுதியில் மழையுடனான காலநிலை நிலவியுள்ளது. எனவே, மோட்டார் சைக்கிளில் வந்தவர் வழுக்கிச்சென்று, லொறியின் பின்பகுதி சில்லில் சிக்குண்டார் என ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# போருக்கு ஆதரவான ரஷ்ய வீரர்களுக்குத் தடை

(ரமணி)

பரிஸ் 24 ஒலிம்பிக்கில் தனிநபராக ரஷ்ய வீரர்கள் பங்குபற்றலாம். போருக்கு ஆதரவான வீரர்களும், இராணுவத்தில் பணிபுரியும் வீரர்களும் பங்குபற்றுவதற்கு தடை விதிப்பது தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி ஆராய்கிறது. ரஷ்ய அல்லது பெலாரஷ்ய இராணுவம் அல்லது தேசிய பாதுகாப்பு நிறுவனங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு தடை விதிக்கவும் IOCபரிந்துரைத்துள்ளது. ரஷ்யா மற்றும் பெலாரஸ் அணி விளையாட்டுகளான ஹேண்ட்போல் மற்றும் கைப்பந்து போன்றவற்றில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நிர்வாகக் குழுவின் மூன்று நாள் கூட்டத்தின் முதல் நாளுக்குப் பிறகு IOC தலைவர் தோமஸ் போக் அடுத்த ஆண்டு பரிஸில் நடைபெறும் ஒலிம்பிக்கில் ரஷ்யா மற்றும் பெலாரஸ் அணிகளைச் சேர்ப்பது குறித்து ஆளும் குழு இன்னும் ஆலோசித்து வருவதாகக் கூறினார். பரிஸ் 2024ஐ ஐஓசி நிர்வாகக் குழு இன்னும் விவாதிக்கவில்லை. ஆனால், "சர்வதேச விளையாட்டுக்குத் திரும்புவது" என்று பலமுறை கூறி இந்த விடயத்தில் முடிவெடுப்பதற்கான காலவரிசையை வழங்குவது "பொருத்தமானது அல்ல" என்று போக் கூறினார். இருப்பினும், ரஷ்யா மற்றும் உக்ரைனில் அதன் போருடன் வெளிப்படையாக ஒற்றுமையைக் காட்டும் எந்தவொரு விளையாட்டு வீரரும் போட்டியிட அனுமதிக்கப்படக்கூடாது என்ற தனது பரிந்துரையில் அவர் உறுதியாக இருந்தார்.

IOC ஆல் வெளியிடப்பட்ட நிபந்தனைகளின் கீழ் குழு விளையாட்டு மற்றும் குழு நிகழ்வுகளின் வரையறை



சர்வதேச கூட்டமைப்பின் சொந்த விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். டோக்கியோவில் மறுசீரமைக்கப்பட்ட 2020 ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்யா அணி விளையாட்டு மற்றும் நிகழ்வுகளில் ஏழு தங்கங்கள் உட்பட 21 பதக்கங்களை வென்றது. டோக்கியோவில் நடந்த தனிநபர் போட்டியில் தங்கப் பதக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கம் வென்ற ஃபென்சர் சோஃபியா வெலிகயா, ஆயுதப்படை கெப்டனாக உள்ளார். ரஷ்யாவின் கொடி மற்றும் தேசிய கீதம் இல்லாமல் ஒலிம்பிக்கில் போட்டியிடப் போவதில்லை என்று அவர் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 2022இல் மொஸ்கோ, உக்ரைன் மீது படையெடுப்பைத் தொடங்கிய சிறிது நேரத்திலேயே பல ஒலிம்பிக் விளையாட்டு வீரர்கள் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உரையைக்கொண்டிருந்த பேரணியில் பங்கேற்றனர். கிராஸ்-கன்ட்ரி ஸ்கீயிங், ஜிம்னாஸ்டிக்ஸ், ஃபிகர் ஸ்கேட்டிங் மற்றும் நீச்சல் ஆகியவற்றிலிருந்து பதக்கம் வென்றவர்கள் புட்டினின் உரையைச் சுற்றியுள்ள கச்சேரி மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக லுஷ்னிகி ஸ்டேடியத்தில் மேடையில் கூடினர். இரட்டை ஒலிம்பிக் நீச்சல் தங்கப் பதக்கம் வென்ற எவ்ஜெனி ரைலோவ், மொஸ்கோ காவல்துறையில் ஒரு சார்ஜென்ட், நிகழ்வில் அவர் தோன்றியதன் விளைவாக உலக நீர்வாழ்வினால் ஒன்பது மாதங்கள் தடை செய்யப்பட்டார்.

கலாசார உரிமைகளுக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் அலெக்ஸாண்ட்ரா சாந்தகி, ஏற்கனவே உக்ரைனில் சண்டையிட்ட ரஷ்ய வீரர்கள் பரிஸ் 2024 இல் தோன்ற அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறினார். மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் அல்லது போருக்கான பிரசாரத்தில் நேரடியாக சம்பந்தப்பட்ட ரஷ்யர்கள் மட்டுமே சர்வதேச விளையாட்டிலிருந்து தடை செய்யப்பட வேண்டும் என்று கிரேக்கம் பரிந்துரைத்தது.

# கடந்த 15 ஆண்டுகளில் செம்மஞ்சள் நிற தொப்பி வென்ற வீரர்கள் பட்டியல்




கடந்த 2008ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் 15 ஐ.பி.எல். தொடர்கள் வெற்றிகரமாக முடிந்துள்ள நிலையில், 16ஆவது தொடர் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் கிண்ணத்தை வெல்லும் முனைப்பில் அனைத்து அணிகளும் தீவிரமாக தயாராகிவரும் நிலையில், கிண்ணத்தை வெல்ல வேண்டுமென்றால் அனைத்து அணிகளின் பேட்ஸ்மேன்கள் சிறப்பாக பேட்டிங் ஆடியாக வேண்டும்.

குறிப்பாக, யாராவது ஒரு பேட்ஸ்மேன் தொடர் முழுக்க சிறப்பாக ஆடி ஓட்டங்களை குவிக்க வேண்டும். அந்தவகையில் கடந்த 15 சீசன்களிலும் அதிக ஓட்டங்களைக் குவித்து ஒவ்வொரு சீசனிலும் செம்மஞ்சள் நிற தொப்பியை வென்ற வீரர்கள் யார் யாரென்று பார்ப்போம்.

1. **ஷான் மார்ஷ்** - 616 ஓட்டங்கள் (கிங்ஸ் லெவன் பஞ்சாப்) - 2008
2. **மேத்யூ ஹைடன்** - 572 ஓட்டங்கள் (சென்னை சுப்பர் கிங்ஸ்) - 2009
3. **சச்சின் டெண்டுல்கர்** - 618 ஓட்டங்கள் (மும்பை இந்தியன்ஸ்) - 2010
4. **கிறிஸ் கெய்ல்** - 608 ஓட்டங்கள் (ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்) - 2011
5. **கிறிஸ் கெய்ல்** - 733 ஓட்டங்கள் (ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்) - 2012
6. **மைக்கேல் ஹசி** - 733 ஓட்டங்கள் (சென்னை சுப்பர் கிங்ஸ்) - 2013
7. **ராபின் உத்தப்பா** - 660 ஓட்டங்கள் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்) - 2014
8. **டேவிட் வார்னர்** - 562 ஓட்டங்கள் (சன்ரைசர்ஸ் ஹைதராபாத்) - 2015
9. **விராட் கோலி** - 973 ஓட்டங்கள் (ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்) - 2016
10. **டேவிட் வார்னர்** - 641 ஓட்டங்கள் (சன்ரைசர்ஸ் ஹைதராபாத்) - 2017
11. **கேன் வில்லியம்சன்** - 735 ஓட்டங்கள் (சன்ரைசர்ஸ் ஹைதராபாத்) - 2018
12. **டேவிட் வார்னர்** - 692 ஓட்டங்கள் (சன்ரைசர்ஸ் ஹைதராபாத்) - 2019
13. **கே.எல் ராகுல்** - 670 ஓட்டங்கள் (பஞ்சாப் கிங்ஸ்) - 2020
14. **ருதுராஜ் கெய்க்வாட்** - 635 ஓட்டங்கள் (சென்னை சுப்பர் கிங்ஸ்) - 2021
15. **ஜோஸ் பட்லர்** - 863 ஓட்டங்கள் (ராஜஸ்தான் ரோயல்ஸ்) - 2022

# பீலே, மரடோனாவுக்கு அருகில் மெஸ்ஸியின் சிலை

ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர கால்பந்து வீரரான லியோனல் மெஸ்ஸிக்கு அவருடைய சிலை, கிண்ணம், கமாண்ட் ஒவ் புட்போல் போன்ற கௌரவங்களை வழங்கி சிறப்பித்திருக்கும் தென் அமெரிக்க உதைபந்து கூட்டமைப்பு, அதன் அருங்காட்சியகத்தில் பீலே மற்றும் மரடோனாவுக்கு அருகில் லியோனல் மெஸ்ஸியின் சிலையும் வைக்கப்படும் என்று மிகப்பெரிய கௌரவத்தை வழங்கியுள்ளது.

2022 பீபா உலகக்கிண்ணத்தை ஆர்ஜென்ரீனா 36 வருடங்கள் கழித்து வென்றதற்கான கொண்டாட்டங்கள் இன்னும் முடியவில்லை. 36 வருட கிண்ண கனவிற்கான காத்திருப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்த லியோனல் மெஸ்ஸிக்கு 2022ஆம் ஆண்டு சிறந்த வீரர் என்ற விருதும் தங்கப்பந்து விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தென் அமெரிக்க உதைபந்து கூட்டமைப்பானது 35 வயதான மெஸ்ஸிக்கு அவரது சிலை, தலைமைக்கான கோல், கிண்ணத்துக்கான பிரதி மற்றும் கமாண்ட் ஒவ் புட்போல் போன்றவற்றை வழங்கி



கௌரவித்துள்ளது. அதுமட்டுமல்லாமல் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள புகழ்பெற்ற வீரர்களான பீலே மற்றும் டியாகோ மரடோனாவின் சிலைகளுடன் இணைந்து மெஸ்ஸியின் சிலையும் வைக்கப்படும் என்று கூறி உயர்ந்தபட்ச கௌரத்தை மெஸ்ஸிக்கு வழங்கி பெருமைப்படுத்தியுள்ளது.







கண்டி மாவட்டத்திலுள்ள பொல்கொல்ல ரோயல் ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு வைபவம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே பிரதம அதிதியாகக் கலந்து பரிசு வழங்குவதையும், விளையாட்டுப் போட்டி மற்றும் உடற்பயிற்சிக் கண்காட்சி என்பவற்றின் சில கட்டங்களையும் காணலாம். (படங்கள் - கண்டி நிருபர்)

# அதிர்ச்சி தோல்விகண்ட இலங்கை இளையோர் அணி



இலங்கை, பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் இளையோர் அணிகளுக்கிடையிலான முக்கோண ஒருநாள் தொடரின் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெறும் அணியை தீர்மானிக்கும் ஆட்டத்தில் இலங்கை அணியை ஆப்கானிஸ்தான் 4 ஓட்டங்களால் வீழ்த்தி இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றது.

அபுதாபியின் டோலரன்ஸ் அரங்கில் ஆரம்பமான போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பாடிய ஆப்கான் அணி 50 ஓவர்களுக்கு 7 விக்கெட்டுகளை பறிகொடுத்து 323 ஓட்டங்கள் எடுத்தது. வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட 324 ஓட்டங்களை அடைவதற்கு பதிலுக்குத் துடுப்பாடிய இலங்கை 19 வயதின் கீழ் அணி 49.3 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 319 ஓட்டங்களுடன் போட்டியில் 4 ஓட்டங்களால் அதிர்ச்சி தோல்வியைத் தழுவியது.

இந்த முக்கோண ஒருநாள் தொடரில் மூன்று போட்டிகளில் தொடர்ச்சியாக தோல்வியடைந்த இலங்கை அணி, தொடரின் இறுதிப் போட்டியில் ஆடும் வாய்ப்பினை இழக்க நாளை இறுதிப் போட்டியில் ஆப்கானிஸ்தான் – பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# அசத்தில் வெற்றியுடன் ரி20 தொடரை வென்ற மேற்கிந்திய தீவுகள்




தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ரி20 தொடரை 2-1 என்ற கணக்கில் மேற்கிந்திய தீவுகள் அணி கைப்பற்றியது. ஜோன்ஸ்பர்க்கில் நேற்று முன்தினம் நடந்த கடைசி ரி20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பாடி 220 ஓட்டங்கள் குவித்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அதிரடியாக 200 ஓட்டங்களைக் கடந்த நிலையில், இறுதியில் அல்சரி ஜோசப்பின் மிரட்டலான பந்துவீச்சால் 7 ஓட்டங்களில் வெற்றியை இழந்தது. அந்த அணி 20 ஓவரில் 213 ஓட்டங்கள் எடுத்தது.

கடைசிவரை வெற்றிக்காக போராடிய கேப்டன் மார்க்ரம் 18 பந்துகளில் 35 ஓட்டங்கள் எடுத்து களத்தில் நின்றார். அபாரமாக பந்துவீசிய அல்சரி ஜோசப் 5 விக்கெட்டுகளையும், ஹோல்டர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். ஆட்டநாயகன் விருதை ஜோசப் வென்றார். இரு அணிகளுக்குமிடையிலான ஒருநாள் தொடர் சமனில் முடிந்த நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணி 2-1 என்ற கணக்கில் ரி20 தொடரைக் கைப்பற்றியது.






கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் (தேசிய பாடசாலை) 140ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்ட இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. பிரதம கௌரவ சிறப்பு அதிதிகளாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீம், கணக்காளர் வை.ஹபிபுள்ளா, இலங்கை தேசிய கிறிஸ்தவ சபையின் பொதுச் செயலாளர் அருட்பணி சுசீதர் சிவநாயகம் கலந்து சிறப்பித்தனர். (படங்கள் - எருவில் நிருபர்)

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7